பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikathir

விழயல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 28 சனிக்கிழமை 13.07.2019 கதிர் 250

## இது ரகசியம் அல்ல!

ஈஸ்டர் ஞாயிறன்று நடத்தப்பட்ட தொடர் வெடிகுண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விவகாரம் நன்கு சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

தன்னையும் அந்தத் தெரிவுக் குழு விசாரணைக்கு பக்கம் 02 ›››

# மைத்திரியின் குடும்பத்தால் எனக்குக் கொலை மிரட்டல்!

## ரொஷான் ரணசிங்க எம்.பி. பரபரப்புக் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 13

எனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கிறது ஜனாதிபதியின் குடும்பம். ஜனாதிபதி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார். சபாநாயகர் இதில் தலையிட்டு எனது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது கோரிக்கை விடுத்தார் பொலனறுவை மாவட்ட எம்.பி. ரொஷான் ரணசிங்க. பக்கம் 11 ›››

# ரிஷாத் மீண்டும் அமைச்சரானால் தூக்கில் தொங்கி உயிர் விடுவேன்

## அத்துரலிய ரத்ன தேரர் அரசுக்கு எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 13

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியூதீனுக்கு மீண்டும் அமைச்சர் பதவி வழங்கினால் இனி உண்ணாவிரதம் இருக்கப் போவதில்லை என்றும், தூக்கிட்டு உயிரை மாய்ப்பேன் என்றும் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர். பக்கம் 11 ›››

## பனாமா சதுப்பு நிலத்தில் சிக்கி யாழ். இளைஞன் பரிதாபச் சாவு!



கொழும்பு, ஜூலை 13

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் அமெரிக்கா செல்லும் வழியில், பனா பக்கம் 11 ›››

## எல்லை தாண்டி மீன்பிடித்த 6 இந்திய மீனவர்கள் கைது!



யாழ்ப்பாணம், ஜூலை 13

வடக்கு கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 06 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட் பக்கம் 11 ›››

## கோரம் இல்லாமையால் ஒத்திவைக்கப்பட்ட சபை

கொழும்பு, ஜூலை 13

நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை முதல் சபை ஒத்திவைப்புவேளை விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நேற்றுப் பக்கம் 11 ›››

## இலஞ்ச அரசியல் ஊடாகவே ஆதரவைத் திரட்டியது அரசு!

### ஜே.வி.பியின் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 13

இலஞ்ச அரசியல் ஊடாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையைதோற்கடிப்பதற்கான ஆதரவை அரசு திரட்டியது. – என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். பக்கம் 11 ›››

## வடக்கில் சுகாதார சேவைகள் மேம்பாட்டுக்கு 900 கோடி ரூபா கடன் வழங்கியது நெதர்லாந்து

கொழும்பு, ஜூலை 13

வடக்கு மாகாணத்தின் 4 வைத்தியசாலைகளின் அபிவிருத்தி உள்ளிட்ட மாகாணத்தின் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கு நெதர்லாந்து அரசால் 900 கோடி ரூபா கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. பக்கம் 11 ›››

## சோபா உடன்படிக்கைக்கு எதிர்ப்பு: கூர்ந்து அவதானிக்கிறது இந்தியா!

புதுடில்லி, ஜூலை 13

அமெரிக்காவுடனான சோபா உடன்படிக்கைக்கு இலங்கையில் எழுந்துள்ள எதிர்ப்புகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாக எக்கனமிக்ஸ் ரைம்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. பக்கம் 11 ›››

## சஹ்ரானுடன் ஆயுதப் பயிற்சி; 20 வயதுள்ள இளைஞர் கைது

கொழும்பு, ஜூலை 13

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் மொகமட் சஹ்ரான் காசிமுடன் ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபட்டவர் என்ற குற்றச்சாட்டில் 20 வயதுடைய பக்கம் 11 ›››

## விடுதலைப் போராட்டத்தை நேசித்த அருட்தந்தை பத்திநாதர் காலமானார்!



யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மறைமாவட்டத்தின் சிரேஷ்ட அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் நேற்று முன் தினம் கொழும்பில் மாரடைப்பு காரணமாக தனது 74ஆவது வயதில் காலமானார்.

இவர் பக்கம் 11 ›››

## 27 ஏக்கர் காணிகள் நேற்று வலி.வடக்கில் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 13

வலிகாகம் வடக்குப் பிரதேசத்தில் இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளில் 27.5 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன. பக்கம் 11 ›››

## விடுவிக்கப்பட்ட காணியை பார்த்துவிட்டு வீடு திரும்பிய வயோதிபர் விபத்தில் சாவு!

யாழ்ப்பாணம், ஜூலை 13

மீள்குடியமர்வுக்காக விடுவிக்கப்பட்ட தனது காணியை பார்வையிட்ட பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்த முதியவர் மீசாலைப்பகுதியில் நடந்த விபத்தில் பக்கம் 11 ›››

# ரணில் அரசுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாடு ஆட்சி மீதான நம்பிக்கையால் ஏற்பட்டதல்ல

**நாம் அழித்தொழிக்கப்பட்டுவிடக்கூடாதே என்கிற அச்சத்தால் ஏற்படுகின்ற முடிவுதான் அது என்கிறார் சரவணபவன் எம்.பி.**



கொழும்பு, ஜுலை 13

இன்று இந்த ஆட்சி தொடர்வதற்காக நாம் ஆதரவளிக்கும் ஒரு நிலை ஏற்பட்டால்கூட அது இந்த ஆட்சியின் மீதான நம்பிக்கையால் அல்ல, நாம் அழித்தொழிக்கப்பட்டுவிடக்கூடாதே என்கிற அச்சத்தால் ஏற்படுகின்ற முடிவு என்பதை இந்த உலகம் ஏற்றுக்கொள்ளவேண்டும். எந்தவொருசிங்கள,பௌத்தஆட்சியின் மீதும் தமிழர்களுக்கு நம்பிக்கை கிடையாது என்பதுதான் எமது அறுதியும் இறுதியுமான முடிவு.

– இவ்வாறு நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன்.

அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியின் மீது நம்பிக்கை உண்டா, இல்லையா என்கிற விவாதத்திற்காகக் கூடியிருக்கின்றோம். இந்த நிலை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் வேறு வேறானவை. எந்தவொரு சிங்கள, பௌத்த ஆட்சியையும் தமிழர்களாகிய எங்களால் மானசீகமாக ஆதரிக்க முடியாது. பல்லின, பலமத, பலசமூகநாடாக இலங்கை ஆக்கப்படும்பொழுது ஆட்சியைப் பிடிக்கக்கூடிய நேர்மையான தரப்பு ஒன்றை மட்டுமே தமிழர்களால் ஆதரிக்க முடியுமே தவிர, இன்று அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் கட்சியையும் அதிகாரத்தைப் பிடிப்பதற்கு முயற்சிக்கும் கட்சியையும் தமிழர்களால் ஒருபோதும் ஆதரிக்க முடியாது.

ஆனால், அரசியலில் தமிழர்களின் நிலை இன்று பரிதாபகரமானது. அவர்களுக்கு முன்னால் உள்ள தெரிவு யார் நல்லவர், யார் கெட்டவர என்பதல்ல. இருக்கின்ற கெட்டவர்களில் யாரைத் தெரிந்தெடுப்பது என்பதுதான். இன்றைய ஆட்சிக்கு ஆதரவு வழங்க வேண்டுமா என்பதல்ல எம்முன் உள்ள கேள்வி, தமிழர்களுக்கு இதைவிட நரகத்தைத் தந்துவிடக் கூடியவர்கள் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாதே என்கிற பதற்றம் தான் எங்கள் முடிவுகளின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடியது. தெரியாத தேவதையைவிட தெரிந்த பேய்களே மேலானவை என்கிறது ஆங்கிலப் பழமொழி. தமிழர்களுக்கு முன்பாக உள்ளதோ தெரிந்த பேய்களும் நன்கு தெரிந்த பிணந்தின்னிப் பிசாசுகளும்தான். இதில் ஒன்றைத் தெரிந்தாகவேண்டும் என்பதுதான் தமிழர்களின் நிர்ப்பந்தம். எனவே களச்சூழல் தமிழர்களுக்கு நேர்மையான தெரிவுகள் எதனையும் விட்டுச் செல்லவில்லை.

ஆனால், இன்றைய ஆட்சியையும்கூட தமிழர்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் ஏன் ஆதரிக்க முடியாது என்பதை நான் இங்கு விளக்கவேண்டியது இந்தச் சந்தர்ப்பத்தில் அவசியம் என்று நினைக்கின்றேன். 2015ஆம் ஆண்டு புதிய ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதில் தமிழர்களும் மிக முக்கிய பங்காற்றினார்கள் என்பதும் ஏன் அந்தப் பங்கையாற்றினார்கள் என்பதும் உலகறிந்த ரகசியம். ஆனால், இன்றைய அரச தலைவரும் தலைமை அமைச்சரும் தமிழர்களை நம்ப வைத்துக் கழுத்தறுத்தவர்கள். தீர்வைத் தருகின்றோம், புதிய அரசமைப்பைக் கொண்டு வருகின்றோம் என்று நம்பவைத்து நம்ப வைத்தே ஏமாற்றியவர்கள். ஏமாற்றுகின்ற சிங்களத் தலைவர்களின் வாரிசுகளாக அவர்களும் நம்பி ஏமாறுகின்ற தமிழ்த் தலைவர்களின் வாரிசுகளாக நாங்களும் இருக்கின்றோம் என்பதே இந்த நாட்டின் துரதிர்ஷ்டம்.

எம்மை நம்பவைத்து ஏமாற்றியது மட்டுமல்ல, ஐக்கிய நாடுகள் சபையையும் பன்னாட்டுச் சமூகத்தையும்கூட நம்ப வைத்து ஏமாற்றியது இந்த ஆட்சி. தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. நிலைமாறுகால நீதி இல்லாமலேயே அந்தக் காலம் கடந்து போய்க்கொண்டிருக்கின்றது. தமிழர்களின் படுகொலைகளுக்கு நீதி வழங்கப்படவேயில்லை. வடக்கு, கிழக்கில் பௌத்தமயமாக்கல் நிறுத்தப்படவில்லை. அரச வேலை வாய்ப்புக்களில் தமிழர்களைப் புறந்தள்ளி, சிங்களவர்களுக்கே வாய்ப்புக் கொடுக்கும் போக்கு நிறுத்தப்படவில்லை, வடக்கு, கிழக்கில் தமிழர்களின் இனப் பரம்பலைச் சிதைக்கும் நோக்கோடு அரசால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் இருக்கும் இடங்களைச் சிங்களமயமாக்குதல் தொடர்கின்றது. இப்படி தமிழர்கள் தனிநாடு கேட்டுப் போராடுவதற்கு என்னென்ன நியாயங்களை எல்லாம் 30 வருடங்களுக்கு முன்னர் வைத்தார்களோ அவையெல்லாம் இன்றும் நவீன வடிவத்தில் 30 வருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிட வேகமாக நிகழ்ந்து வரும் நிலைமைதான் தமிழர்களால் அதிகாரத்துக் கொண்டு வரப்பட்ட ஆட்சியின் சாதனை. அப்படிப்பட்ட ஓர் ஆட்சியைத் தமிழர்கள் ஏன் ஆதரிக்க வேண்டும்? கூடாதுதான். ஆனால், இவர்களை ஆட்சியில் இருந்து அகற்றிவிட்டால், அடுத்து வரப் போகின்ற ஆட்சி தமிழர்களை மீண்டும் இனப்படுகொலைக்கு உள்ளாக்கி சுத்தமாகத் துடைத்தழித்துவிடுவார்களோ என்கிற அச்சம் ஏற்படுகிறதல்லவா? அதுதான் நிதானித்துச் சிந்திக்க வைக்கின்றது.

இன்று இந்த ஆட்சி தொடர்வதற்காக நாம் ஆதரவளிக்கும் ஒரு நிலை ஏற்பட்டால்கூட அது இந்த ஆட்சியின் மீதான நம்பிக்கையால் அல்ல, நாம் அழித்தொழிக்கப்பட்டுவிடக்கூடாதே என்கிற அச்சத்தால் ஏற்படுகின்ற முடிவு என்பதை இந்த உலகம் ஏற்றுக் கொள்ளவேண்டும். எந்தவொரு சிங்கள, பௌத்த ஆட்சியின் மீதும் தமிழர்களுக்கு நம்பிக்கை கிடையாது என்பதுதான் எமது அறுதியும் இறுதியுமான முடிவு.

கடந்த ஏப்ரல் மாதம் உயிர்த்தெழுகை நாளன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக எமது நாடு ஒரு பேரழிவுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக உயிர்ப்பலிகள், படுகொலைகள், சொத்திழப்புகள் எனப் பல நெருக்கடிகள் ஏற்பட்டமை மட்டுமன்றி எமது பொருளாதாரத்தின் பிரதான வருவாய் மூலமான சுற்றுலாத்துறைக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இப்பெரும் பாதிப்பிலிருந்து மீண்டெழும் முயற்சியில் பங்கு கொள்வது இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும். ஆனால் சில இனவாத அமைப்புகளும் சில பௌத்த அமைப்புக்களும் இச்சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து வருகின்றனர். முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லையா எனக் கேட்குமளவுக்கு முஸ்லிம்கள் அச்சத்துடனேயே வாழவும், நடமாடவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இப்படியாக ஒருபுறம் முஸ்லிம்கள் மீதான பிரகடனப்படுத்தப்படாத ஒடுக்குமுறை மேலெழுந்துள்ள நிலையில் கண்டியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசாரதேரர் இது ஒரு சிங்கள தேசம் எனவும் தான் இதைக் கூறும் போது தமிழர்கள் கோபிக்கமட்டார்கள் எனவும் தெரிவித்திருந்தார். வடக்கு, கிழக்குத் தமிழர் தேசம் எனவும் ஏனைய பிரதேசங்கள் சிங்கள தேசம் எனவும்கூறியிருந்தால் நாம் கோபிக்க மாட்டோம் என்பது உண்மைதான். ஆனால் அவரின் வார்த்தைகளோ இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமான தேசம் எனவும் தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு இங்கு உரிமையில்லை என்பதையும் வலியுறுத்தும் வகையிலேயே அவரின் உரை அமைந்திருந்தது.

இந்த நிலையில் அவரின் கூற்றுக்கு அரசோ எதிர்க்கட்சிக் கூட்டணியோ ஏன் ஜே.வி.பி. யினரோ கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இந்த நாட்டில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உரிமையில்லை என்ற கூற்றை அவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றார்களா என நான் கேட்டு வைக்க விரும்புகிறேன்.

விரும்பியோ விரும்பாமலோ, மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ தமிழர்கள், முஸ்லிம்களின் உரிமைகளை மறுதலிக்கும் நீங்கள், எங்களை இந்த நாட்டுப் பிரஜைகளாக ஏற்க முழுமனதுடன் விருப்பம் கொள்ளாத நீங்கள், ஏன் உங்களுக்கு நெருக்கடி வரும் நேரங்களிலெல்லாம் எங்கள் ஆதரவைக் கோரி நிற்கிறீர்கள்?

2015இல் இந்த ஆட்சி அமைக்கப்பட்ட பின்பு நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த அரசுக்கு ஆதரவு வழங்கினோம். வரவு – செலவுத் திட்டங்கள், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஒக்ரோபர் 26இல் ஏற்படுத்தப்படவிருந்த ஆட்சி மாற்றம் என ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் அரசுக்கு உறுதியான ஆதரவைவழங்கிவந்திருக்கிறோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என வாக்களிக்கப்பட்டது. நாடாளுமன்ற அரசமைப்பு தெரிவுக்குழு எழுபது தடவைகளுக்கு மேல் கூடிக் கலைந்த நிலையில் நான்கு வருடங்கள் கடந்துவிட்டபோதும் அது ஆலோசனை என்ற அளவிலேயே உள்ளது. 1972ஆம் ஆண்டின் அரசமைப்பு 1978இன் அரசமைப்பு என்பன ஒரு சில மாதங்களில் தயாரித்து நிறைவேற்றப்பட முடியுமானால் தற்போதைய அரசமைப்போ நான்கு வருடங்

பக்கம் 10 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்திருப்பதாகவும் –

தானும் தெரிவுக்குழு முன்னிலையில் தோன்றி உண்மைகள் எல்லாவற்றையும் அம்பலப்படுத்துவார் என்றும் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார்.

பிறகு என்ன? கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக, தெரிவுக்குழு விசாரணைகளில் பல புதிய 'திடுக்' தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கலாம். அப்படித்தான் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெரிவுக்குழு முன் தோன்றி விடயங்களைத் தெளிவுபடுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரிவுக்குழு அழைப்பு விடுத்திருக்கின்றது.

ஆனால், அவர் அந்த அழைப்பை உதாசீனம் செய்யுமாற் போல நடந்து வருகின்றார். இதன் விளைவு எப்படி அமையும் என்பதை இப்போதே எதிர்வு கூறமுடியாதுள்ளது.

இலங்கை அரசமைப்பின்படி ஜனாதிபதி நாடாளுமன்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர் என்றே கூறப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத்தினால் தத்துவமளிக்கப்பட்ட அமைப்பே நாடாளுமன்றத் தெரிவுக்குழு.

அதன் அழைப்பை ஜனாதிபதி இலகுவாக உதாசீனம் செய்ய முடியுமா என்பது பாரதூரமான கேள்விதான்.

நாடாளுமன்றுக்கு ஜனாதிபதி பொறுப்புக் கூறவேண்டும் என்றுதான் அரசமைப்பு வலியுறுத்துகின்றதே தவிர, நாடாளுமன்று ஜனாதிபதிக்குக் கட்டுப்பட்டது என்று எங்கும் கூறப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

சில சமயங்களில் இவ்வாறு நாடாளுமன்றின் அழைப்பை உதாசீனம் செய்து நடக்கின்றமைக்காக அவர் ஜனாதிபதி பதவியிலிருக்கும் வரை அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும் அவர் பதவியை விட்டு இறங்கியதும் அவர் மீது நடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க முடியும்.

அவர் இன்னும் நான்கு மாதங்களில் பதவியை விட்டு இறங்கக் கூடிய சூழலும், அதன் பின்னரும் இதே நாடாளுமன்றம் ஆகக் குறைந்தது மேலும் இரண்டு மாதங்களாவது அதிகாரத்தில் இருக்கும் நிலைமையும் உள்ளது.

ஜனாதிபதி பதவியை விட்டு இறங்கியதும் தமது ஓய்வு காலத்தை எந்த விதப் பிய்சல் பிடுங்கலுமின்றி அமைதியாகக் கழிப்பதற்கு மைத்திரிபால சிறிசேன விரும்புவாராயின் இது போன்ற விடயங்களில் அவர் பொறுப்போடு சிந்தித்து, முன்யோசனையுடன் நடந்து கொள்வது நல்லது.

ஜனாதிபதி மட்டுமல்லாமல், அவருக்கு ஜல்ராவாக இருக்கும் சட்டமா அதிபரையும் கூட அழைப்பதற்குத் தெரிவுக்குழு முடிவு செய்திருக்கின்றது.

பிரதமர், சட்டமா அதிபர் போன்றோர் தெரிவுக்குழுவின் முன்னால் வருகையில் பல சுவாரஸியமான விடயங்கள் வெளி வரும் என்று எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள விகாரை இன்று திறந்து வைக்கப்பட இருபதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் ஓர் அழைப்பிதழ் சமூக ஊடகங்களில் தாராளமாக உலாவருகின்றது.

இந்த விகாரையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க என்றும், சிறப்பு விருந்தினர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. என்றும் அந்த அழைப்பு இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால் அந்த அழைப்பை விடுப்பது 'சாவகச்சேரி மூலக் கிளை, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு என சாவகச்சேரியில் மூலக் கிளை எதுவும் கிடையாது.

'மூலக்கிளை' என்ற பதத்தைப் பயன்படுத்துவது தமிழரசுக் கட்சிதான்.

அதைப் பார்த்ததும் எழுந்த சந்தேகத்தை அடுத்து சுமந்திரன் எம்.பியுடன் தொடர்பு கொண்டு கேட்டேன்.

அவரும், தாமும் அத்தகைய போலி அழைப்பிதழைப் பார்த்தார் என்றும் –

அப்படி ஒரு நிகழ்ச்சி எதிலும் பங்குபற்றத் தாம் அழைக்கப்படவுமில்லை; தாம் யாருக்கும் இசைவு தெரிவிக்கவுமில்லை என்றும் – அவர் தெரிவித்தார்.

அப்படி ஒரு நிகழ்வு நடைபெறுகின்றதா என்றும் அவர் கேட்டும் வைத்தார்.

அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காக இப்படி போலி அழைப்பிதழ்களைக் கூட அவிழ்த்து விடும் கில்லாடிகள் நம் மத்தியில் இருக்கத்தானே செய்கின்றார்கள்?

- மின்னல் -

# காணாமற்போனோரின் உறவுகள் நவாலியில் கவனவீர்ப்புப் போர்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடித் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்திவரும் வவுனியா மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினாகள் நேற்று முன்தினம் மாலை நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

படுகொலைகளுக்கும், காணாமற்போதல்களுக்கும் அமெரிக்கா தகுந்த நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியே பதாகைகளைத் தாங்கியவாறு அவர்களது இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

(ஐ - 07)








# ஜனாதிபதிக்கு எதிராகவும் குற்றப் பிரேரணை தேவை

## ஹிருணிக்கா சபையில் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகவும் குற்றப் பிரேரணை கொண்டு வரவேண்டியது அவசியமென சு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் பிரதமர், அரசு மற்றும் அமைச்சரவைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் விடுதலை முன்னணியினால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை வரவேற்கத்தக்கதோர் விடயமாகும். ஆனாலும் பிரதமருக்கும் அரசுக்கும் மாத்திரம் இதனைக் கொண்டுவரக்கூடாது.

மாறாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பிரேரணை கொண்டுவரபடவேண்டியது அவசியமாகும்.

அந்தவகையில் ஜனாதிபதிக்கு எதிராகவும் குற்றப் பிரேரணை தயாரிக்கப்படுமாயின் அதற்காக 75 பேரின் கையொப்பங்களை திரட்டித் தருவதற்குத் தயாராகவுள்ளேன்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த, ஜனாதிபதி வேட்பாளராகத் தன்னை (மைத்திரியை) நிறுத்துவாரென ஜனாதிபதி கூறினார் என அண்மையில் கேள்விப்பட்டேன். அவ்வாறு அவரை நிறுத்தினால் பொதுஜன பெரமுன பாரிய பின்னடைவைச் நிச்சயம் சந்திக்கும் – என்றார்.

# முற்போக்குடைய நாடாக இலங்கையை மாற்றுவேன்

## ஆட்சி அதிகாரத்தைத் தன்னிடம் தரக் கோருகிறார் சஜித் பிரேமதாஸ

**கொழும்பு, ஜூலை 13**

**நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மக்கள் என்னிடம் ஒப்படைத்தால் இலங்கையை முற்போக்கான நாடாக மாற்றுவேன் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

இரத்மலானையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையைப் பிரகாசமான நாடாக மாற்றுவதற்கு நாம் தயாராகவுள்ளோம். அதற்கு மக்கள்தான் எமக்கு உதவவேண்டும்.

மேலும் யார் தவறானவர்கள், சரியானவர்கள் என்பது குறித்து மக்களாகிய நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள்.

மஹிந்தவின் ஆட்சியின் போது, இலங்கை நடுத்தர வருமானம் கொண்ட நாடாக மாறியதால் உலகின் ஏழ்மையான நாடுகளுக்கான உதவி நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் தற்போது பின்னடைவைச் சந்தித்துள்ள நாட்டை முன்னேற்றப் பாதையை நோக்கிக் கொண்டுச் செல்ல என்னால் முடியும் – என்றார். (ஐ)



### கல்முனையில் கொண்டாட்டம்

*கொழும்பு, ஜூலை 13*

*கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திறதுக்கு முழு அதிகாரம் கொண்ட கணக்காளர் நியமிக்கப்பட்டமைக்கு கல்முனையில் மகிழ்ச்சி வெளியிடப்பட்டுள்ளது.*

*முழுஅதிகாரம்கொண்ட பிரதேச செயலகமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கான உறுதிமொழியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் பிரதமர் ரணில் நேற்று முன்தினம் எழுத்தில் வழங்கினார்.*

*இதனை வரவேற்று நேற்று முன்தினம் மாலை கல்முனை மாநகரில் இளைஞர்கள்பட்டாசு கொளுத்தி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுனர்.*

*இதன்போது கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுவந்த கல்முனை மாநகரசபை உறுப்பினர் ராஜனும் பங்குகொண்டார். அவரை இளைஞர்கள் தூக்கிச் சுமந்து தமது மகிழ்ச்சியை தெரிவித்தனர்.*

# 5 லட்சத்துக்கும் அதிகமானோர் நாட்டில் வறட்சியால் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 13

வறட்சியான காலநிலை காரணமாக 8 மாவட்டங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.



வடக்கு, கிழக்கு, புத்தளம், திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் குடிதண்ணீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்காக 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி, இடர் முகாமைத்துவ அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக அந்தப் பிரதேசங்களில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான குடிதண்ணீர் பௌசர்கள் மற்றும் குடிதண்ணீர்த் தாங்கிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வறட்சிமற்றும்ஏனையஅனர்த்த நிலைகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் 117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அது தொடர்பில் அறிவிக்க முடியும் என இடர் முகாமைத்துவ நிலையத் தின் பிரதிப்பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (ஐ)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிராக்டர் பறிமுதல்

கிளிநொச்சி, ஜூலை 13

கிளிநொச்சி – ஊரியான் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்டு விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி – ஊரியான் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் தொடர்ச்சியாகச் சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவது குறித்து பிரதேச செயலாளர், கிராம அலுவலர், கிராம மட்ட பொது அமைப்புக்கள் , பொதுமக்கள் ஆகி யோர் பொலிஸாருக்குப் பல தடவை தகவல் களை வழங்கிய போதும் பொலிஸார் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோரைக் கைது செய்யவில்லை.

இந்நிலையில் பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன், ஊரியான் கிராம அலுவலர் நந்தகுமார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊரியான் கனகராயன் ஆற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடத்திற்கு நேற்று முன்தினம் வியாழக் கிழமை நேரடியாகச் சென்றுள்ளனர்.

இதன்போது சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஓர் உழவு இயந்திரத்தையும் அதன் சாரதியையும் பிடித்து விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்தனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மஹிந்த அரசு மீதான பயமே ரணில் அரசைத் தப்ப வைத்தது

மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடித்து தனது அரசின் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் உடனடியாக வரக்கூடியது ஜனாதிபதித் தேர்தலே. பெரும்பாலும் அது இந்த வருட இறுதியில் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்னும் நான்கு, ஐந்து மாதங்களுக்குள் அத்தேர்தலை நடத்தியாக வேண்டும்.

அதற்கு முன்னர் ரணிலின் தற்போதைய அரசு கவிழ்வதற்கான வாய்ப்புகள் இனி மிக, மிகக் குறைவு என்பதை நேற்றுமுன்தினம் நடந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் தற்சமயம் பதினான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் தென்னிலங்கையின் ஆட்சியாளர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் சத்தியாக இருக்கின்றது. அதையும் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பு அம்பலப்படுத்தி நிற்கின்றது.

கூட்டமைப்பின் 14 எம்.பிக்களும் ஒன்று சேர்ந்து ரணில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதனால் ரணிலின் அரசு 27 மேலதிக வாக்குகளால் தப்பிப் பிழைத்தது.

அதேபோல, ரணிலின் அரசு மீது நம்பிக்கையில்லை எனக் கருதி, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகக் கூட்டமைப்பின் 14 எம்.பிக்களும் வாக்களித்திருப்பார்களாயின் ரணிலின் அரசு ஒரு வாக்கினால் கவிழ்ந்திருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதும் கண்கூடு.

நாடாளுமன்றத்தில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது உரையாற்றிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் எல்லோரும் ரணிலின் அரசு மீதான தமது அவநம்பிக்கையை – நம்பிக்கையீனத்தை – வரிசைப்படுத்தி, புட்டுப் புட்டு வைத்தனர். அந்த உரைகளை – குறிப்பாகக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் உரையை – செவிமடுத்த எவரும் அவர் ரணிலின் அரசுக்கு எதிராக வாக்களிக்கும் முடிவுக்கு வந்துவிட்டார் என்றுதான் கருதியிருப்பார்கள்.

இதேபோல, கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் ரணிலின் அரசை வாங்கு வாங்குகென்று வாங்கினார்.

*"இந்த அரசை நம்பமுடியாது. இந்த அரசு வடக்கு மக்களை ஏமாற்றி விட்டது. புதிய அரசமைப்பு ஊடாகத் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு தருவார்கள் என்றார்கள். எழுபதுக்கும் அதிகமான கூட்டங்கள், அமர்வுகளை நடத்தினார்கள். ஆனால் கடைசியாக எமது மக்களுக்கு எதுவுமே கிடைக்கவே இல்லை. எங்கள் மக்கள் இப்படித் தொடர்ந்து ஏமாற்றப்பட வேண்டுமா?"* – இப்படி எல்லாம் காட்டமாக கேட்டார் ஈ.சரவணபவன் எம்.பி.

ஆனால், கடைசியாக அதே ரணில் அரசைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தில்தான் நாங்கள் இருக்கிறோம் என்ற யதார்த்த நிலைமையை சம்பந்தனும், சரவணபவனும் வெளிப்படுத்த வேண்டியவர்களானார்கள்.

*"இந்த (ரணிலின்) அரசைத் தோற்கடித்து நாம் எத்தகைய புதிய அரசை உருவாக்க முடியும்? மீண்டும் ராஜபக்ஷ அரசு போன்ற ஒன்று வர இடமளிக்க முடியுமா? ஆகவே 'தெரியாத தேவதையை விட, தெரிந்த பிசாசு நல்லது' என்ற அடிப்படையில் ரணில் அரசைக் காப்பற்றுகிறோம்."* – என்றார் சரவணபவன் எம்.பி.

நம்ப முடியாத அரசு என்று தாம் கூறும் அரசையே காப்பாற்றிக் காபந்து பண்ண வேண்டிய துரதிஷ்ட இக்கட்டில் சிக்கியிருக்கின்றது கூட்டமைப்பு.

இதே கருத்தையே கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனும் நேற்று சபையில் முன்வைத்தார்.

*"தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்தினால் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ அரசே உருவாகும். கடந்த காலத்தில் ராஜபக்ஷ அரசின் கீழ் தமிழ் மக்கள் பட்ட துன்பங்களை நாம் மறக்கவில்லை.*

*"ஆகவேதான் நாம் ரணில் அரசை வீழ்த்தாமல் உள்ளோம்."*

– என்று விளக்கமளித்தார் சம்பந்தன்.

ஆக, இப்போது ரணிலின் அரசு தன்னுடைய தகைமையினால் – அல்லது நம்பகத் தன்மையினால் – அதன் மீது நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைத்துள்ள நம்பிக்கையினால் – தப்பிப் பிழைக்கவில்லை என்பது தெளிவு.

ரணில் அரசுக்கு மாற்றாக வரக் கூடிய மஹிந்த ராஜபக்ஷவின் உத்தேச அரசு மீது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள அச்சம் – பயம் – பீதியே, ரணில் அரசைக் காப்பாற்றித் தக்க வைத்திருக்கின்றது என்பதுதன் உண்மை.

# பொதுமக்களின் காணிகள் அவர்களுக்கே உரியவை

## கூறுகிறார் வடக்கு ஆளுநர்

கொழும்பு, ஜூலை 13

மக்களின் காணிகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உண்மையில் பல ஏக்கர் காணிகள் விடுவிப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. 20 ஏக்கருக்கு அதிகமான காணி விடுவிக்கப்படவுள்ளன. மேலும் 100 ஏக்கர் காணிவரை விடுவிக்கப்படவுள்ளது. இவை அனைத்தையும் தனியாகவே செய்ய முடிகின்றது. இதற்கு அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு கிடைத்திருக்கவில்லை. அவர்கள் வெறுமனே காணிகள் விடுவிக்கப்படவில்லை என்ற கருத்துக்களை மாத்திரமே முன்வைத்து வருகின்றனர்.

மக்களின் காணிகள் மக்களைச் சென்றடைய வேண்டும். அதேபோன்று அரச திணைக்களங்களின் காணிகளும் உரிய முறைப்படி பயன்பாட்டிற்காக விடுவிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் உள்ளேன் – என்றார். (ஐ)

# தமிழ் மக்களின் மயானத்தையும் விட்டு வைக்காத சிங்களவர்கள்!

## வவுனியாவில் தொடரும் ஆக்கிரமிப்பு

வவுனியா – சிதம்பரபுரத்தில் நான்கு கிராம மக்கள் பயன்படுத்தும் மயானத்தைச் சிங்கள மக்கள்தமக்குரியது என உரிமைகோருகின்றமையால் சர்ச்சை எழுந்துள்ளது.

வவுனியாவின் எல்லையோரக் கிராமமான சிதம்பரபுரத்தில் அமைந்துள்ள பொது மயானத்தை கற்குளம் படிவம் 1, 2 சிதம்பரபுரம், சிதம்பரநகர் கிராம மக்கள் 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து பயன்படுத்தி வந்தனர்.

மயானத்தில் தமது கிராமத்தில் இறந்தவர்களைப் புதைத்தமைக்கான நினைவுக் கற்களையும் நாட்டியுள்ளனர். தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வந்த இந்த பொது மயானத்துக்கு அண்மையாக, சிங்கள மக்கள் காணிகளை அடாத்தாகப் பிடித்துக் குடியேறி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பொது மயானத்தை அந்தப் பகுதித் தமிழ் மக்கள் துப்பரவு செய்து கொண்டிருந்தபோது அங்கு வந்த சிங்கள மக்கள், அந்தக் காணி தமக்குரியது எனவும் துப்பரவு செய்யவேண்டாம் எனவும் தெரிவித்திருந்தனர் எனக் கிராம மக்கள் கூறினர்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை அந்தப் பகுதிக்கு வருகை தந்த சிங்களவரான பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், அந்தக் காணியில் எவ்வித வேலைகளையும் செய்ய வேண்டாம் எனவும், இவ்விடயம் தொடர்பாகப் பிரதேச சபையில் கலந்துரையாட வேண்டியுள்ளதால் பிரதேசசபைக்கு வருமாறும் தெரிவித்துச் சென்றுள்ளனர்..

இதனால் இந்த மயானம் தொடர்பான விடயம் அங்கு பெரும் முறுகல் நிலையை தோற்றுவித்துள்ளது. (ஐ)

# மக்களை ஏமாற்றுகின்றார்கள் தமிழ் அரசியல் தலைமைகள்

## வியாழேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 13

தமிழ் தலைமைகள் அரசால் ஏமாற்றப்படவில்லை. மாறாக அரசுடன் இணைந்து கொண்டு தமிழ்த் தலைவர்கள் தான் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்து நான்கு வருடங்களாகியும அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத – வக்கற்ற – அரசின் மீது இனியும் நம்பிக்கை வைப்பவர்கள் முட்டாள்களே என நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதாக அரசு வழங்கிய வாக்குறுதிக்கு இணங்கி கடந்த வரவு –செலவுத்திட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்தது.

ஆனால் ஒரே இரவில் வர்த்தமானியில் வெளியிடக்கூடிய இந்தச் சிறிய விடயத்தைக் கூடச் செய்யாமல் அரசு இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போதும் இதேபோன்றுதான். வழங்கிய வாக்குறுதிகளையும் எவற்றையுமே நிறைவேற்றவில்லை.

எனவே இந்த அரசுக்கு எதிராக ஜே.வி.பி. கொண்டு வந்து சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதில் எந்தத் தவறும் கிடையாது – என்றார். (ஐ)

# ஜனாதிபதியையும் தெரிவுக்குழு அழைத்து விசாரிக்க வேண்டும்

## ஜே.வி.பி. சபையில் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பு கூறவேண்டும். எனவே அவரை விசேட நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு அழைக்க வேண்டும் என்று ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு பொறுப்பு கூறவேண்டும். அவருக்கு நாடாளுமன்றத்தில் தனியான ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் ஜனாதிபதிக்கு பொறுப்பு கூறத் தேவையில்லை. எனவே அவரை விசேட தெரிவுக் குழுவுக்கு அழைக்கவேண்டும். நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியே தெரிவுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியால் தெரிவுக்குழுவுக்கு வருவதை நிராகரிக்க முடியாது. அவரை அழைக்குமாறு எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது – என்றார்.

## நாளை

14.07.2019
ஞாயிற்றுக்கிழமை

பிரதோஷ விரதம்

நட்சத்திரம்: கேட்டை மு.இ 7.32 வரை
திதி : திரயோதசி பி.இ 2.24 வரை
இராகுகாலம் : 4.30 – 6.00
சுப நேரம் : 9.00 – 10.30

# பிள்ளைகளுக்கு ராணுவமே பொறுப்புக் கூறவேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தல்

**வவுனியா, ஜுலை 13**
**எமது பிள்ளைகளை இராணுவத்தினரிடமே ஒப்படைத்தோம். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான பொறுப்பை இராணுவமே ஏற்கவேண்டும் என வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. வவுனியா ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது, சங்கத்தின் உறுப்பினரான ஆ. லீலாதேவி இவ்வாறு குறிப்பிட்டார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில் – காணாமல்போனஉறவுகள்தம்மிடம் சரணடையவில்லை எனவும் அது தொடர்பாக அரசிடமே கேட்கவேண்டும் எனவும் இராணுவ அதிகாரியொருவர் அண்மையில் தெரிவித்திருந்தார். இவ்வாறான நகைச்சுவையை வேறு எந்த ஒரு நாட்டிலும் கேட்க முடியாது. இராணுவம் வேறு, அரசு வேறு என்று கூறக்கூடிய விடயம் அல்ல. அத்துடன் யுத்த காலத்தில் முன்னரங்கில் நின்றது அரசின் இராணுவமே. நாங்கள் எங்கள் பிள்ளைகளை ஒப்படைத்தது இராணுவத்திடமே.

இவ்வாறான நிலையில் இராணுவ அதிகாரி தங்களிடம் சரணடைய வில்லை எனக் கூறுவது கேலிக்குரியது மட்டுமல்ல. இலங்கை மக்களை முட்டாளாக எண்ணிக் கூறிய கருத்துமாகும். இவ்வாறான கருத்தை எமது மக்கள் பிரதிநிதிகளோ அல்லது எமக்காக போராடுவதாகக் கூறிக்கொள்ளும் அமைப்புக்களோ கேள்விக்குட்படுத்த வுமில்லை; கண்டிக்கவுமில்லை.

நாம் இராணுவத்திடமே பிள்ளைகளைக்கையளித்தோம். எனவே இராணுவமே இதற்குப் பதில் சொல்லவேண்டும். அத்துடன் இந்த அரசும் நாட்டுத் தலைவரும் எமக்கான பதிலைத் தரவேண்டும். அவர்கள் பதில் தராத பட்சத்திலேயே தற்போது நாம் சர்வதேசத்தின் உதவியை நாடி நீதியைக் கோருகின்றோம்.

ஆகவே சர்வதேசமும் இவ்வாறான விடயங்களில் கண்டும் காணாமல் இருப்பதை விடுத்து இதில் தலையிட்டு தீர்வை வழங்க முன்வரவேண்டும். எமது போராட்டத்துக்கு உதவுவதாகப் பல அமைப்புக்களும் வேறு பலரும் கூறிக்கொண்டாலும் எமது போராட்டம் தனித்துவமானது; எந்தக் கட்சியும் சாராதது.

நாமாக முடிவெடுத்து, நாம் போராடிக் கொண்டிருகின்றோம். இறுதியாக ஒரு தாய் இருக்கும் வரை எமது போராட்டம் தொடரும். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு முன் கொண்டு செல்லும்வரை தொடரும் – என்றார். (ஐ)

# சாதனை நிகழ்த்தினார் மரண தண்டனை கைதி

கொழும்பு, ஜுலை 13
இலங்கையில் மரண தண்டனைக் கைதி ஒருவர் முதுமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.



இலங்கையில் முதல்தடவையாகவும், உலகில் ஐந்தாவது தடவையாகவும் சிறைக் கைதி ஒருவர் முதுமாணிப் பட்டம் பெறும் நிகழ்வொன்று இடம் பெற்றுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இந்திக்க ஏக்கநாயக்க என்ற இலங்கையரே தனது முதுமாணிப் பட்டத்தை பெற்றுக் கொண்டார்.


இவர் தற்போது குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் மரண தண்டனைகைதியாக உள்ள நிலையில் ஆயுள் தண்டனை கைதியாக மாற்றப்பட்டிருக்கின்றார்.

அந்தவகைஅவர் ஏற்கனவே, பட்டம் பெற்ற ஒருவராக இருந்தார். இதன் பின்னர் 2017ஆம் ஆண்டு அவர் களனிப் பல்கலைகழகத் தில் முதுமாணிப் பட்டக் கற்கையை மேற்கொண்டார்.

நேற்று முன்தினம் அவருக்கு முதுமாணிப்பட்டத்திற்கான சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# சுவிட்ஸர்லாந்து விபத்தில் திருமலை இளைஞன் பலி!

பேர்ண், ஜுலை 13
சுவிட்ஸர்லாந்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இலங்கைத் தமிழ் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



இதில் 25 வயதான, திருகோணமலையை பிறப்பிடமாகவும், சுவிட்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட ரதீபன் ரவீந்திரன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இவரது மோட்டார் சைக்கிள், வாகனம் ஒன்றை முந்திச்செல்ல முற்பட்டபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில், அந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து அந்நாட்டுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# மாங்குளத்தில் சூறைக்காற்று; வீடுகள், மரங்கள் கடும் சேதம்!

முல்லைத்தீவு, ஜுலை 03
முல்லைத்தீவு – மாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் சூறைக் காற்றினால், வீடுகள் பல சேதமடைந்துள்ளன.



முல்லைத்தீவு மாவட்டத்தில் சில இடங்களில் நேற்று முன்தினம் மழை பெய்தது. நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் மாங்குளம் பகுதியில் வீசிய கடும் காற்றினால் வீதியோரங்களில் நின்ற மரங்கள் பல முறிந்து விழுந்து வீதியில் போக்குவரத்துத் தடைபட்டது. பயன்தரு மரங்கள் பலவும் நாசமாகியுள்ளன.

மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 9 வீடுகளும் தச்சம்பன் பகுதியில் ஒரு வீடும் புலுமச்சிநாதகுளம் பகுதியில் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த வீடுகளை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன், மாங்குளம் கிராம அலுவலர் தனபால்ராஜ், அம்பகாமம் பதில் கிராம அலுவலர் ரஞ்சிதகுமார்,



புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் மு.முகுந்தகஜன், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் சென்று பார்வையிட்டுள்ளனர். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜுலை 13
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோகமார்க்கங்களின்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**மன்னார் பிரதேசத்தில் –**
வவுனியா நகரம், இறம்பைக்குளம், மூன்றுமுறிப்பு, மதவுவைத்தகுளம், ஈரப்பெரியகுளம், கற்குண்டமடு, அளுத்கம, பூ ஓயா, பஹல அளுத்வத்த, கண்டி வீதி, தவசிக்குளம், குட்செட் வீதி , பண்டாரிக்குளம், நெடுங்குளம், தெற்கிலுப்பைக் குளம், கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வெளிக்குளத்திலிருந்து துட்டுவாகை வரை, கருவேலப்புளியங்குளம், மலையா பருத்திக் குளம், மடு கந்த, அட்டம்பஸ்கட, மாமடுவிலிருந்து பொகஸ்வேவா வரை, பறயனாலங்குளத்திலிருந்து முகத்தான்குளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பறயனாலங்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செட்டிக்குளம் வரை, புளிதறித்த புளியங்குளத்திலிருந்து செக்கட்டிபுலவு வரை, பிரமனாளங்குளத்திலிருந்து பெரியதம்பனை வரை, பூந்தோட்டம், வைரவபுளியங்குளம், பட்டானிச்சூர், குருமன்காடு, வேப்பங்குளம், குளுமாட்டு சந்தி, கூமாங்குளம், மறக்கறம்பளை, நெளுக்குளம், சாம்பல்தோட்டம், பாரதிபுரம், விநாயகபுரம், இராயேந்திர குளம், நாகர் இலுப்பைகுளம், அறுகம்புல்வெளி, அவுசதாப் பிட்டிய, நவகம, பழையனூர், உளுக்குளம், சின்னத்தம்பனை, நேரியகுளம், இலுப்பைக்களம், அழகாபுரி, முதலியார்குளம், சின்ன சிப்பிக்குளம், முகத்தான்குளம், செட்டிக்குளம், வவுனியா வைத்தியசாலை, பூங்கா வீதி , சூசைப்பிள்ளையார்குளம், கொக்கெலிய, அக்கோபுர, கசேசரியடி நீர்ப்பாசன சபை, சுகாதார திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, ஓவியா விடுதி, S.V.R அரிசி ஆலை, ராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, கார்கில்ஸ் பூட் சிற்றி, விமானப்படை முகாம் உப இல 01, மன்றொன் ஆடைத் தொழிற்சாலை, வவுனியா இராணுவ முகாம், வவுனியா விமானப்படை இணைந் பராமரிப்பு நிலையம், மூன்றுமுறிப்பு இராணுவ முகாம்,Gowloom ஆடைத்தொழிற் சாலை, ஈரப்பொயகுளம் இராணுவ முகாம், S.L.P.C ஈரப்பொயகுளம், கீர்த்தி அரிசி ஆலை, HP வீதி, குடாகச்சகொடிய கல்லுடைக்கும் ஆலை, பிரசன்னா கல்லுடைககும் ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை UNHCR குருமன்காடு, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, சுயன் அரிசிஆலை, அஸவ் அரிசிஆலை, சுயன் அரிசி ஆலை காதன்கோட்டம், நெளுக்குளம் நீர்ப்பாசன சபை, தந்திரமலை சந்தி (கஜசிங்கபுர இராணுவ முகாம்), வவுனியா பல்கலைக்கழகம், பம்பைமடு பல்கலைக்கழகம், நெளுக்குளம் தொழிநுட்பக் கல்லூரி, விமானப்படை வேளாங்குளம், செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டிகுளம் தொலைத்தொடர்பு நிலையம், செட்டிகுளம் பல நோககு கூட்டு றவுச்சங்கம், சக்திகம மல்வத்துஓயா இல 02, மெனிக்பாம் வலயம் 02 – Relief கிராமம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**
பறயனாலங்குளத்திலிருந்து, முருங்கன் வரை, முருங்கன் ஊடாக சிலாவத்துறையிலிருந்து முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை, சிலாவத்துறை கடற்படை முகாம், தேக்கம், நானாட்டான் பிரதேச சபை ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# இந்தியாவில் முஸ்லிம்கள் நடத்தப்படும் விதம் கவலை தருகிறது என்கிறார் அமெ. பிரதிநிதி!

வொஷிங்டன்,ஜுலை13

இந்தியாவில் முஸ்லிம்கள் நடத்தப்படும் விதம் கவலை அளிக்கிறது என அமெரிக்க நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி தெரிவித்துள்ளார்.



வொஷிங்டனில் நடைபெற்ற அமெரிக்கா-இந்தியா கூட்டுறவு பொதுமன்ற நிகழ்வின் கலந்துரையாடலில் பங்கேற்ற போதே நான்சி பெலோசி இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

முன்னர் அதிபராக இருந்த ஒபாமாவுடன் இந்தியா சென்ற போது, தொழில்துறையினர் மத்தியில் பிரதமர் மோடி பேசியமையைக் கேட்டேன். நான் கேட்டவற்றிலேயே அற்புதமான பேச்சு அது.

ஆங்கிலத்தில்உரையாற்றிய பிரதமர் மோடி, கேட்பவர்களைத் தனது பேச்சால் கட்டிப்போடும் வகையில் பேசினார். தான் சொல்ல வந்த செய்தியை கொண்டு சேர்ப்பதிலும் அவர் வல்லவர் ஆவார்.

சிறுவயதில் தாம் ஒரு முறை தொப்பிஅணிந்திருந்தவிதத்தை பார்த்து நீ என்ன மகாத்மா காந்தியா எனப்பள்ளியில்ஆசிரியை கேட்டார் எனவும், அதன் பிறகு மகாத்மா காந்தி குறித்து தாம் தேடித்தேடிப் படித்தார் எனவும் மோடி கூறினார்.

இந்திய-அமெரிக்க உறவுகள் ஒட்டுமொத்த உலகத்தையே கைதூக்கிவிட முடியும். அதற்காக இணைந்து பணியாற்ற வேண்டும் என்று நான்சி பெலோசி கூறினார்.

இந்தியாவில் முஸ்லிம்கள் நடத்தப்படும் விதம் குறித்து பெலோசி கவலை தெரிவித்தார்.

# கர்நாடக எம்.எல்.ஏக்களின் ராஜினாமா மீது நடவடிக்கை எடுக்க சபாநாயகருக்குத் தடை!

## உச்ச நீதிமன்றம் நேற்று விடுத்தது



புதுடில்லி,ஜுலை13

கர்நாடக எம்.எல்.ஏ.க் கள் ராஜினாமா கடிதங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க கூடாது என இந்திய உச்சநீதிமன்றம் நேற்று கர்நாடக சபாநாயகருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கர்நாடக எம்.எல்.ஏக்களின் ராஜினாமா விவகாரம் பற்றிய வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நேற்றுத் தொடங்கியது.

இதில், சபாநாயகரின் அதிகாரம் குறித்து உச்சநீதிமன்றம் எந்தக் கேள்வியும் எழுப்பக் கூடாது என சபாநாயகர் நினைக்கின்றாரா என சபாநாயகர் தரப்பிடம் நீதிபதி தரப்புக் கேள்வி எழுப்பியது.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் ரமேஷ்குமாரின் வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி, "நிச்சயமாக இல்லை. இரண்டு எம்.எல்.ஏக்கள் மீது தகுதி நீக்க நடவடிக்கை எடுக்க தொடங்கிய பொழுது அவர்கள் ராஜினாமா கடிதத்தைத் கொடுத்தார்கள். தகுதி நீக்கத்தை தவிர்க்கவே எம்.எல்.ஏக்கள் ராஜினாமா என்ற நாடகத்தை நடத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கையை ஏற்க கூடாது"- எனக் கூறினார்.

'எம்.எல்.ஏக்கள் அளித்த ராஜினாமாக் கடிதம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது சபாநாயகரின் கடமை. ஆனால் அவர் அதிலிருந்து தவறிவிட்டார். எனவே நீதிமன்றத்தை நாடியுள்ளோம்'- என எம்.எல்.ஏ.க்கள் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் முகில் ரோத்தகி கூறினார்.

இந்நிலையில், இது அரசியல் சாசன விவகாரம் என்பதால் இதனை விரிவாக விசாரிக்க வேண்டியுள்ளது. அதனால்ராஜினாமா கடிதம்கொடுத்த எம்.எல்.ஏக்களை தகுதிநீக்கம் செய்யக்கூடாது, ராஜினாமாக் கடிதம் மீதான விவகாரத்தில் தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும். அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை வேறு எந்த முடிவும் எடுக்கக் கூடாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்தமையுடன் இந்த விவகாரம் செவ்வாய் கிழமை மீண்டும் விசாரிக்கப்படும் என்றும் கூறியது.

# ஓரினச் சேர்க்கை இளைஞன் கேலி, கிண்டலால் தற்கொலை

## சென்னையில் சோகச் சம்பவம்



சென்னையில் முடி திருத்தும் நிலையம் ஒன்றில் பணிபுரிந்து வந்த - ஓரினச் சேர்க்கை மீது ஈர்ப்புக் கொண்ட - இளைஞர் நண்பர்களின் கேலி, கிண்டலால் தற்கொலை செய்துக் கொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்தவர் அவினாஷ் படேல். 20 வயதான இவர், சென்னையில் முடிதிருத்தும் அழகு நிலையம் ஒன்றில் பணிபுரிந்து வந்தார். தனது தொழில் திறமையால் அனைவரையும் கவர்ந்த இவரை நண்பர்களாக தொடர்ந்து கேலி,கிண்டல் செய்து வந்துள்ளனர்.

ஓரினச்சேர்க்கையில் ஈர்ப்புக்கொண்ட அவினாஷின் உடல் மொழி, நடை இவை எல்லாவற்றிலும் சற்று வித்யாசம் தெரிந்துள்ளது. இதனால் அவினாஷை அவரது நண்பர்கள் மற்றும் உடன் பணிபுரிவோர் ஆகியோர் அவரைக் கேலி செய்துள்ளனர்.

இதனால் மனமுடைந்து போன அவினாஷ் தனது முகப்புத்தகத்தில் ஒரு பதிவை எழுதி வைத்துட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். அவரது பதிவில் "ஓரினச்சேர்க்கை விருப்பம் இயற்கையாகவே எனக்குள் உள்ளது. என்னைக் கிண்டல் செய்த அனைவருக்கும் நன்றி. இந்தியா போன்ற நாட்டில் என்னால் ஓரினச்சேர்க்கையாளனாக வாழ்வது இயலாதக் காரியம்" - என உருக்கமாகப் பதிவு செய்தார்.

இவரின் பதிவை கண்டு அவரின் மற்ற நண்பர்கள் அவினாஷின் கைத்தொலைபேசிக்குத் தொடர்புக் கொண்டனர். ஆனால், யாரின் அழைப்பையும் எடுக்க விரும்பாத அவினாஷ் அன்று இரவு நீலாங்கரை கடலில் குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

அவரது உடலைக் கைப்பற்றிய பொலிஸார் பிரேதப்பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலும் அவரது முகப்புத்தகப் பதிவை அடிப்படையாகக் கொண்டு வழக்குப்பதிவு செய்துள்ளனர். நண்பர்களின் கேலி மற்றும் கிண்டலால் அவினாஷின் உயிர் பறிப்போன சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இறப்பதற்கு முன்பு அவினாஷ் பதிவிட்டிருந்த முகப்புத்தகப் பதிவும் இணையத்தில் வேகமாகப் பரவி வருகிறது.

# அஸாமில் வெள்ளம் 4 லட்சம் பேர் பாதிப்பு



கவுகாத்தி,ஜுலை13

அஸாமில் பெய்து வரும் தொடர் மழையால் 17 மாவட்டங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. தண்ணீர் சூழ்ந்ததால் 4 லட்சம் பேர் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர்.



தேமாஜி, லக்கிம்பூர், பிஸ்வா நாட், ஜோர்கட், தரங், பார்பேட்டா, நல்பாரி, மஜுலி, சிரங்க், திபுருகார் உள்ளிட்ட 17 மாவட்டங்களில் 700 க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிப்பைச் சந்தித்துள்ளன. பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி 3 பேர் உயிரிழந்துள்ளனர். பலரது வீடுகள் இடிந்துள்ளன. 13 ஆயிரத்து 268 ஹெக்டேர் பரப்பளவு விவசாய நிலம் பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பிரம்மபுத்திரா நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இன்னும் 2 நாள்களில் அது அபாய எல்லையை எட்டும் எனத் தெரிகிறது.

பல இடங்களில் 24 மணிநேரமும்செயல்படும் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. இன்னும் மழை தொடர்ந்தால் பாதிப்பு அதிகமாகும் என அஞ்சப்படுகிறது.

இது போல் உபி., மேற்குவங்கத்திலும் பரவலாக நல்ல மழை பெய்துவருகிறது. தமிழகமக்களும் மழையை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர்.

# நளினி உட்பட ஏழு பேரை விடுவிக்குமாறு ஆளுநரை நீதிமன்றம் பணிக்க முடியாது

## தமிழக அரசு சட்டத்தரணி சட்டவாதம்

சென்னை,ஜுலை13

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்யுமாறு ஆளுநருக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது என தமிழக அரசின் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.



மேற்படி 7 பேர் விடுதலை தொடர்பாக தமிழக அரசு தீர்மானம் அனுப்பியும் ஆளுநர் முடிவெடுக்கவில்லை என நளினி தரப்பில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது வாதிட்ட நளினி தரப்பு, 7 பேரை விடுதலை செய்ய ஆணை பிறக்குமாறு ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரியது.

அப்போது குறுக்கிட்ட தமிழக அரசு வழக்கறிஞர், 7 பேர் விடுதலைவிவகாரத்தில் ஆளுநருக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது எனத் தெரிவித்தார். மேலும், 7 பேர் விடுதலை தொடர்பாக ஆளுநர் சட்ட ஆலோசனை செய்து வருகிறார் எனக் கூறினார்.

7 பேர் விடுதலை தொடர்பான அமைச்சரவை பரிந்துரைக்குஒப்புதல்அளிக்க,ஆளுநருக்கு உத்தரவிடக் கோரிய இந்த வழக்கு, விசாரணைக்கு உகந்ததா என்பது குறித்த உத்தரவு திகதி குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டது.

# பாகிஸ்தானில் ரயில்கள் மோதல் 21 பயணிகள் உடல் நசுங்கிப் பலி

## எண்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயம்

**லாகூர்,ஜூலை13**
**பாகிஸ்தானில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது பயணிகள் ரயில் மோதி நேரிட்ட கோர விபத்தில் 21 பேர் பரிதாபமாக உயிரிழந் தனர். லாகூர் நகரில் இருந்து குவெட்டா நக ருக்கு அக்பர் எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயணிகள் ரயில் வழக்கம் போல பயணிகளை ஏற்றிக்கொண்டு லாகூரில் இருந்து குவெட்டா நோக்கி நேற்று சென்று கொண்டிருந்தது.**





வழியில் சாதிக்காபாத் தாலு காவில் வால்ஹார் ரயில் நிலை யத்தில் நின்று கொண்டி ருந்த சரக்குரயிலுடன் பயங் கரமாக மோதியது. அப் போது பலத்த சத்தம் எழுந் தது. பயணிகள் மரண ஓலமிட்டனர்.

பயணிகள் ரயில், பிர தான பாதையில் ஓடுவதற் குப் பதிலாக தவறான பாதையில் வந்ததால் அங்கு நின்று கொண்டி ருந்த சரக்கு ரயிலுடன் மோதியதாக முதல் கட்ட தகவல்கள் கூறுகின்றன.

இந்த கோர விபத்தில் 21 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரி ழந்தனர். 80 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த கோரக் விபத்தில் அக்பர் எக்ஸ்பிரஸ் ரயிலின் இயந்திரம் முற்றிலும் நாசமாகி விட்டது.

இந்த விபத்துக் குறித்துத் தகவல் அறிந்ததும் ரயில்வே உயர் அதிகாரிகளும், மீட்புப் படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். கனரக இயந்தி ரங்கள் கொண்டு ரயில் பெட்டி களை வெட்டி, பலியா னவர்களின் உடல் களை மீட்டு, அருகில் உள்ள சாதிக்கா பாத் ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

படுகாயம் அடைந் தவர்களை மீட்டு சிகிச் சைக்காக சாதிக்கா பாத் மற்றும் ரகீம் யார் கான் ஆஸ்பத்திரிக ளுக்கு அம்புலன்ஸு களில் அனுப்பி வைத் தனர்.



விபத்துக்குள்ளான பயணிகள் ரயிலில் இருந்த பயணிகள் அனை வரும் பத்திரமாக வெளியேற்றப் பட்டனர்.

ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுகிறவர்களில் சிலரது உடல் நிலை மோசமாக உள்ளதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

இந்த விபத்தில் பலியான வர்களின் குடும்பங்களுக்கு பிரத மர் இம்ரான்கான் ஆழ்ந்த இரங் கல் தெரிவித்துள்ளார்.

இதையொட்டி அவர் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், பல்லாண்டு காலமாக கண்டுகொள்ளப்படாமல் இருந்து வந்துள்ள ரயில்வே கட்ட மைப்பைச் சீரமைக்கவும், பாதுகாப் புத் தரத்தை உறுதி செய்யவும் ரயில்வே மந்திரியை அறிவுறுத்தி உள்ளேன் என கூறி உள்ளார்.

ரயில்வே மந்திரி கே் ரஷீத் அகமதுவும் பலியானவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரி வித்துள்ளார். பணியாளர்களின் தவறால் தான் இந்த விபத்து நடந் துள்ளது. விபத்து குறித்து உயர் மட்ட விசாரணைக்கு உத்தரவிட் டுள்ளேன் எனவும் அவர் கூறி உள்ளார்.

பலியானவர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.15 லட்சமும், படுகாயம் அடைந்தவர்கள் குடும் பங்களுக்கு தலா ரூ.5 லட்சமும் இழப்பீடு வழங் கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த விபத்துக்கு ரயில்வே மந்திரி ரஷீத் தான் பொறுப்பேற்க வேண்டும், அவர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் பிலாவல் பூட்டோ சர்தாரி கூறி உள்ளார். பாகிஸ்தான் முஸ் லிம் லீக் (நவாஸ்) கட்சியின் மூத்த தலைவர் மரியம் நவாஸும் பலியா னவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்து இருக்கிறார்.

# ‘வாட்ஸ் அப்’பில் மோசமான செய்தி; முன்னாள் மனைவிக்கு 3 நாள் சிறை

டுபாய்,ஜூலை13

சவுதியில் முன்னாள் கணவருக்கு ‘வாட்ஸ் அப்’பில் மோசமான செய்தி அனுப்பிய பெண்ணுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவைச் சேர்ந்த ஒரு பெண், தன் கணவரை 5 ஆண்டுகளுக்கு முன்னர் விவாகரத்துச் செய்துவிட்டார்.

இந்த நிலையில், அந்தப் பெண் அவருக்கு ‘வாட்ஸ் அப்’பில் மோசமான வார்த்தைகளைக் கொண்ட செய்தி அனுப்பினார். அதில் அவரை பிசாசு, முரடன் எனக் குறிப்பிட்டிருந்தமையுடன் மோசமான வார்த் தைகளை நிறையப் பயன்படுத்தி இருந்தார்.

இது தொடர்பாக அவரது முன்னாள் கணவர், ஜெட்டா நகர குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார்.

விசாரணையின்போது அந்தப் பெண், திருமண மானபோது தன் குடும்பத்தை புண்படுத்தியமையால் தான் இப்போது அவ்வாறு மோசமான வார்த்தைகளைக் கொண்ட செய்தியை ‘வாட்ஸ் அப்’பில் அனுப்பினார் எனக் குறிப்பிட்டார். இருப்பினும் அவருக்கு 3 நாள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு அளித்தார்.

# மெக்ஸிக்கோவில் நிலச்சரிவில் ஒரே குடும்பத்தில் 7 பேர் சாவு



மெக்ஸிக்கோ,ஜூலை13

மெக்ஸிக்கோ நாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் புதைந்து ஒரே குடும்பத்தின் 7 பேர் பலியாகி உள்ளனர்.

மெக்ஸிக்கோவில் ஜூன் தொடங்கி அக்டோபர் வரை மழை காலம் ஆகும். அந்நாட்டின் மத்திய பகுதியில் சான்டோ தோமஸ் சவுத்லா பகுதியில் மலையை ஒட்டி பல வீடுகள் அமைந்துள்ளன. அதனை அடுத்து குறுகலான ஆறு ஒன்றும் ஓடுகிறது. இந்நிலையில், தங்களது குழந்தைகள் தொடக்க பள்ளியில் தேர்ச்சி அடைந்து பட்டம் பெற்றமைக்காக அதனை விழாவாகக் கொண்டாட ஒரு குடும்பத்தி னர் முடிவு செய்துள்ளனர். இதற்காக இந்த பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அவர்கள் ஒன்றாகக் கூடியுள்ளனர்.

இதனிடையே தொடர்ந்து கனமழை பெய்து வந்த நிலையில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டு உள்ளது. இதனால் அந்த பகுதியில் உள்ள பல வீடுகள் மண் ணில் புதைந்துள்ளன. இந்த சம்பவத்தில் கொண் டாட்டத்தில் ஈடுபட்டிருந்த வீடும் மண்ணில் புதைந் துள்ளது. இதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 சிறுவர்கள் உள்பட 7 பேர் உயிரிழந்தனர். இதுபற்றிய தகவல் அறிந்து அதிகாரிகள் அங்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். அங்கு இருந்த 2 குழந்தை களை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து உள்ளனர்.

தொடர்ந்து இங்கு அதிகளவில் மழை பெய்ய கூடும் என்பதனால் நிலச்சரிவுகளில் இருந்து காப்பதற்காக இரண்டு வீடுகளில் வசித்தவர்களை அவர்கள் வெளியேற்றியுள்ளனர்.

# தென்துருவத்தில் பனிக்கட்டிகள் வேகமாக உருகுவதால் பாதிப்பு!



தென்துருவமான அண் டார்ட்டிகாவில் எதிர்பார்த்ததை விட பனிக்கட்டிகள் வேகமாக உருகி வருவதால், அதன் பின் விளைவுகளைத் தடுக்க வழி இல்லை என விஞ்ஞானிகள் அதிர்ச்சித் தகவல் வெளியிட் டுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாகப் பனிப் பாறைகள் உருகிக் கடலில் கலந்து வருகின்றமையால் அண் டார்ட்டிகாவில் நீர் மட்டம் படிப்படி யாக உயர்ந்து வருகிறது. இந்நிலை யில், நாசாவிடம் நிதியுதவி பெறும் ஆராய்ச்சியாளர்கள் சிலர், மிகப் பெரிய பனிப்பாலமான, தவைட்ஸ் பனிப்பாறை (Thwaites glacier) எப்படி உருகுகிறது எனப் பல கட்ட ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அதன் முடிவில் தவைட்ஸ் பனிப்பாறை ஆபத்து விளை விக்கும் வகையில் நிலையற்ற தன்மையில் இருப்பதை விஞ்ஞா னிகள் கண்டுபிடித்துள்ளனர். சிறிய பாதிப்பு ஏற்பட்டாலும், கடல் மட்டம் பெருமளவு உயர வாய்ப் புள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித் துள்ளனர்.

# டிரம்ப் தீர்க்கமான தலைவர்தான்; ஆனால் நேர்மையானவர் அல்லர்!

## அனேக அமேரிக்கர்களின் கருத்து இதுவாம்

வொஷிங்டன்,ஜூலை13

‘அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தீர்க்கமான தலைவர், ஆனால், நேர்மையானவர் அல்லர்’ – என்று அமெரிக்கக் கருத்துக்கணிப்பு ஒன் றில் கருத்து நிலைப்பாடு வெளி யாகியுள்ளது.

அமெரிக்காவில் அந்த நாட்டைச் சேர்ந்த பகுப்பாய்வு மற்றும் ஆலோசனை நிறுவ னம் கேலப், ஜனாதிபதி டிரம்ப் பற்றி ஒரு கருத்துக் கணிப்பு நடத்தி உள்ளது.



இந்தக் கருத்துக்கணிப்பில் பங்கேற்றவர்களில் 51 சதவீதம் பேர் டிரம்ப் தீர்க்கமான முடிவுகள் எடுப்பவர், வலுவான தலைவர் என கூறி உள்ளனர்.

அதே நேரத்தில் பெரும்பா லானோர் அவரது நேர்மை, நம்பகத்தன்மையை கேள்விக் குள்ளாக்கி உள்ளனர். 34 சதவீத அமெ ரிக்கர்கள் மட்டுமே டிரம்ப் நேர்மையானவர், நம்பகத்தன்மை கொண்டவர் எனக் கூறி இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் கருத் துக்கணிப்பில் பங்கேற்ற குடியரசு கட்சியினரில் 75 சதவீதம் பேர் டிரம்ப் நேர்மை யானவர் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சியான ஜன நாயக கட்சியில் 6 சதவீதம் பேர் மட்டுமே டிரம்ப் நேர்மையானவர் எனக் கூறி இருக்கிறார்கள்.

காலைக்கதிர்
Kalaikathir


# இடம் புரளும் தர்மத் தேர்

இலங்கைச் சிறுபான்மை சமூகங்கள் குறிப்பாக முஸ்லிம்கள் – தேசப்பற்றிலிருந்து திட்டமிட்டு தூரமாக்கப்படும் சாட்சியங்கள் நாளாந்தம் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன.

போருக்குப் பிறகு கிடைத்த நிம்மதியும் அமைதியும் தேரவாத மேலாண்மையின் வளர்ச்சிப் படிக்கு உதவியுள்ளமையையே2010 இலிருந்து அவதானிக்கப்பட்டு வரும் உண்மைகள்.

சிங்கள மொழிக்கும் ஆரியப் பரம்பலுக்கும் வடக்கு,கிழக்கில் இடம்பெற்ற விடுதலைப் போர் ஆபத்தாகுமென்ற இவர்களின் கவலையைத் தீர்த்து வைத்த பெருமை மஹிந்தவுக்கு மட்டுமே உரியதென்பதும் இவர்களின் நிலைப்பாடு.

இந்த நிலைப்பாடுகளை நிறுத்தி அமைக்கப்படும் புதிய ஆட்சியில் பௌத்தத்திற்கு மாத்திரம் முன்னிலை வழங்கி, ஏனைய கலாசாரங்களை – குறிப்பாக இஸ்லாமிய கலாசாரத்தை – மட்டுப்படுத்தி, மலினப் படுத்துவதே இவர்களின் நோக்கம்.

ஜப்பான், சீனா, தாய்வான், திபெத் உள்ளிட்ட தேரவாத நாடுகளில் பௌத்தம் சவாலுக்குள்ளானதில்லை.இனிமேல் இலங்கையிலும் இந்தச் சவாலில்லாத நிலையை ஏற்படுத்தவே தேரவாத மேலாண்மை காலூன்றியுள்ளது.

இவர்களின் விரிவான வேலைத்திட்டத்துக்கு இலங்கையின்,சமாதானக் கள நிலைவரமும் விரிந்து கொடுத்துள்ளது.

ஒரு காலத்தில் தென்னிலங்கைக்கு மட்டும் உரித்தாக்கப்பட்டதேரவாத சித்தாந்தம் பரந்த நிலத்தில் வேரூன்றிப் பங்களித்த பெருமைக்குச் சொந்தக்காரர்களை மீண்டும் ஆட்சிக்குத் தேர்ந்தெடுப்பதே இவர்களின் திட்டம்.

அனைத்தையும் சாதிக்கச் சாத்தியமான இவர்களின் விம்பத்தை வியூகத்தின் அடிப்படையில் ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளும் இவர்களிடமுள்ளன.

மதங்களுக்கு எதிரான குரோதத்தை வளர்த்து, பழைய ஆட்சியாளர்களின் பெருமைகளை பெயர் கூறாமல் உச்சரிப்பது ஊடாக தேரவாதத்துக்குப் பொருத்தமான அரசை ஏற்படுத்தும் மேலாண்மைக் கனவு தெற்கு அரசியல்வானில் மிக நீண்ட காலமாக கலைக்கப் படாதிருந்தது.

எனினும் ஈஸ்டர் தினத் தாக்குதல்களுக்குப் பின்னரே இவர்கள் ஈசல்கள் போலப் புறப்பட்டுள்ளனர்.இந்த தேரவாதத்துக்குப் பக்கபலமாக உள்ளோரை முஸ்லிம்கள் அடையாளம் கண்டு கொள்வது காலத்தின் தேவையாகும். தமிழ்,சிங்கள சமூகங்களின் சமய நம்பிக்கைகள், சிந்தனை களால் வேறுபட்டவையல்ல.



மொழி வேறுபாடுகள் ஒரு காலத்தில் இணைந்தாலும் கலாசார முரண்பாடுகள் இணையச் சாத்தியமில்லை.

இந்த வேறுபாட்டை வேரூன்றச் செய்து முஸ்லிம்களை தனிமைப் படுத்துதல்,தமிழர்களை கலாசார ரீதியாகஉள்ளீர்த்தல்,தெற்கிலுள்ள முஸ்லிம்களை உள ரீதியாக அச்சுறுத்துதல் உள்ளிட்ட பல இரகசிய திட்டங்களின் ஒட்டுமொத்த முதலீடுகளும் வெவ்வேறு வடிவங்களில் வைப்பிலிடப்படவுள்ளன.

சிறுபான்மைச் சமூகங்களை அரசியல் ரீதியாகப் பிளவுபடுத்தும் பௌத்த மேலாண்மை அரசுகளின் தந்திரங்கள் போருக்குப் பின்னர் பெரிதாகப் பலிக்கவில்லை.

உரிமை அரசியல் மக்களிடமிருந்து படிப்படியாக தூரமாவதால் சிறுபான்மைச் சமூகங்களை வேறு வடிவில் பிளவுபடுத்தும் தந்திரங்களையே தெற்குக் கடும்போக்குக் களமிறக்கவுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியைக் கலப்பினக் கொள்கையின் இருப்பிடமாகக் காட்டிவிட்டால் சிங்கள ராஜ்யம் அமைவதில் ஆசையுள்ள சிங்களவர்களை வேறுபக்கம் திருப்பிவிடலாம்.

இத்திரும்பலுக்கான நியாயத்தை கலாசாரத்தைக் காக்கும் தர்மப் போராகக் கருதுவதற்கான மூளைச் சலவைகளையே தற்போது தேரவாதம் செய்து வருகிறது. இதுமட்டுமல்ல, முஸ்லிம் சமூகத்திலுள்ள சமயக் கூறுகளும் இவர்களுக்கு வாய்ப்பாகிப் போயுள்ளமையே பெரும் கவலை.



இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் பிளவை ஏற்படுத்துவதில் தோற்றுப்போன சில சியோனிச சக்திகள்,கோட்பாடுகளைப் பின்பற்றும்நடைமுறைக் கொள்கைகளில் முரண்பாடுகளை ஏற்படுத்தி வெற்றியும் கண்டுள்ளமை இஸ்லாமிய வரலாற்றில் விழுந்த ஒரு வடுவாகும்.

வஹாபிசம், சூபிசம், சலபி முஸ்லிம்கள்,தப் லீக் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமி,தௌஹீத் ஜமாஅத் – இவை அனைத்தும் இஸ்லாமிய சித்தாந்தத்தைப் பிசகின்றி ஏற்றுள்ள போதும் கொள்கைகளில் முரண்பட்டுள்ளன.

இந்தக் கொள்கைகளில் தமக்குப் பிடித்தவை மட்டுமே இலங்கையில் இருக்க வேண்டுமென, தேரவாதம் தூக்கிப்பிடிப்பது, பௌத்தத்தின் விழுமியங்களுக்கு வலுவூட்டுவதற்காகவா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சமயங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்பட்டாலும் நல்லிணக்கம் ஏற்பட முடியாது என்பதே எனது கருத்து. நல்லிணக்கம் ஏற்பட்டிருந்தால் ஒருமித்தல் வந்திருக்கும். இவ்வாறு ஒருமித்திருந்தால் ஒரு மதமே இருந்திருக்கும்.

எனவே உலகிலுள்ள மதங்களின் கோட்பாடுகள் பற்றி பிற மதங்கள்,மதத் தலைவர்கள் புரிந்துணர்வுடன் செயற்படுவதே, அமைதிக்கு வழிகோலும்.இதைவிடுத்து சமயங்களின் உட்பிளவுகளை பிற சமயத்தவர் தூற்றுவது, சந்தேகிப்பது தனி மனிதனின் சிந்தனையை அச்சுறுத்துவதாகவே கருதப்படும்.

இந்த அச்சுறுத்தலுக்கான ஆரம்பமாகவே கண்டியில் நடந்த போகம்பரை மைதானத் தீர்மானங்கள் உள்ளன.

1950 ஆம் ஆண்டு சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட குர்ஆனையே பின்பற்ற வேண்டுமென ஆலோசனை கூறப்பட்டுள்ளதையும் கருத்துத் திணிப்பாகவே கொள்ள வேண்டியுள்ளது.

முஸ்லிம்களின் வேத நூலான குர்ஆனுக்குப் பொருள் தேடுவது அரபு மொழிப் புலமையுள்ளோராலும் பூரணமாக முடியாதது.

ஒரு வசனம் அருளப்பட்ட பின்னணி, காலச் சூழல்,இடம் என்பவையும் அதற்கான பொருளைப் பெறுவதில் பங்காற்றுகின்றன.

முஸ்லிம்களின் கிப்லாவாக (தொழும் திசை) ஆரம்பத்தில் ஜெரூசலத்திலுள்ள பைத்துல் முகத்தஸ் இருந்தது.

பின்னர் மக்காவிலுள்ள கஹ்பாவே தொழும் திசையானது. ஆரம்பத்தில் விசுவாசிகளில் லாதோரையும் திருமணம் முடிக்க முஸ்லிம்கள் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னரே அது தடுக்கப்பப்பட்டது.சில வேளைகளில் குர்ஆன் வசனங்களுக்கு பொருள் காண முடியாது போனால் இறைதூதரின் வழிகாட்டல்களிலும் தெளிவுகள் பெறப்படுகின்றன.


இஸ்லாத்தின் இலட்சியம் மாறாமல் காலவோட்டத்துக்கு ஏற்ப முஸ்லிம் சமூகம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்ற நெகிழ்வுப்போக்கையே இது காட்டுகிறது. இற்றைக்கு 1500 வருடங்களுக்கு முன்னரே இஸ்லாம் வழங்கிய கருத்து,சிந்தனை சுதந்திரங்களே இவை.

எனவே நவீன கருத்தியல் விளக்கங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் குர்ஆன் வசனங்களில் பொருள் தேடப்படுவது உலகமுள்ள வரைக்கும் இருக்கப்போகிறது.

இந்த நியதியில் 1950 ஆம் ஆண்டின் மொழி பெயர்ப்பை வைத்துக் கொண்டு 59வருடங்களுக்குப்பின்னர் வரப்போகும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது எப்படி என்பதை போகம்பரை மாநாடு தெளிவுபடுத்த வேண்டும்.

-சுஐப் எம்.காசிம்-

“
சிங்கள மொழிக்கும் ஆரியப் பரம்பலுக்கும் வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற விடுதலைப் போர் ஆபத்தாகுமென்ற இவர்களின் கவலையைத் தீர்த்து வைத்த பெருமை மஹிந்தவுக்கு மட்டுமே உரியதென்பதும் இவர்களின் நிலைப்பாடு. இந்த நிலைப்பாடுகளை நிறுத்தி அமைக்கப்படும் புதிய ஆட்சியில் பௌத்தத்திற்கு மாத்திரம் முன்னிலை வழங்கி, ஏனைய கலாசாரங்களை – குறிப்பாக இஸ்லாமிய கலாசாரத்தை – மட்டுப்படுத்தி, மலினப் படுத்துவதே இவர்களின் நோக்கம்.



# அழுகிய நிலையில் பெண்ணின் சடலம்!

யாழ்ப்பாணம், ஜுலை 13

யாழ்ப்பாணம், சுண்டுக்குழி காட்டுக்கந்தோர் வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து, அழுகிய நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் காலை கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலில் உள்ளவர்கள்உள்ளே சென்று பார்த்தபோது அழுகிய நிலையில் பெண் ஒருவரின் சடலம் இருப்பதைக் கண்டனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாணம் சிறு குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மாலதி என்ற 58 வயதுடைய பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பா ணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரயில் மோதி படுகாயமடைந்த வவுனியா இளைஞன் மரணம்

வவுனியா, ஜுலை 13

வவுனியா – புளியங்குளம், புதூர் பகுதியில் பாதுகாப்பற்ற ரயில்வே கடவையில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்துகொழும்புநோக்கிச் சென்ற கடுகதி ரயில், புதூர் ஆலயப் பகுதியிலிருந்து பிரதான வீதியை மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்ட இளைஞனை மோதித் தள்ளியது.

வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக, அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

# சீயோன் தேவாலயத் தாக்குதலில் படுகாயமடைந்த யுவதி மரணம்!

கொழும்பு, ஜுலை 13

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த 22 வயதுடைய யுவதி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.


ராகமை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இந்த யுவதி நேற்று முன் தினம் மரணமானார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பைச் சேர்ந்த குறித்த யுவதி சுமார் 80 நாள்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ஐ)

# திருக்கேதீஸ்வரம் நுழைவாயில் வளைவு தடைக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்!

## வவுனியா கந்தசாமி ஆலயம் முன்பாக நடந்தது






வவுனியா, ஜுலை 13

வரலாற்றுச்சிறப்புமிக்கதிருக்கேதீஸ்வரம் ஆலய நுழைவாயில் வீதியில் அலங்கார வளைவு அமைக்கப் பிரதேச சபையால் விதிக்கப்பட்ட தடை உத்தரவைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தின் முன்பாகநேற்றுமுற்பகல்9.30மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியம், வெங்கலச் செட்டிக்குளம் இந்து ஆலயங்களின்ஒன்றியம்,வவுனியாவடக்கு இந்து ஆலயங்களின் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தன.

மன்னார்திருக்கேதீஸ்வரம்வீதிவளைவை மீண்டும் அமைப்பதற்கு பிரதேச சபைத் தவிசாளர் அனுமதித்த பின், மீளவும் அவரே இடைநிறுத்துமாறு இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியமையை ஆட்சேபித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)







# வடக்கு றோட்டறிக் கழகங்களின் இணைந்த பதவியேற்பு வைபவம்

யாழ்ப்பாணம், ஜுலை 13

இலங்கை மற்றும் மாலைதீவு, றோட்டறி மாவட்டம் 3220 இனுள் பதிவு செய்யப்பட்ட கழகங்களில் வடக்கில் உள்ள றோட்டறிக் கழகங்களின் இணைந்த பதவியேற்பு வைபவம் இன்று சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், றோட்டறி மாவட்டம் 3220 இன் நடப்பாண்டுக்கான ஆளுநர் றொட்டேரியன் எஸ். கருணாகரன் பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுன்னாகம் றோட்டறிக் கழகம், சுன்னாகம் பாரம்பரிய றோட்டறிக் கழகம், யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம், கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகம், யாழ்ப்பாணம் ஈ' றோட்டறிக் கழகம், மன்னார் றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் புதிய தலைவர்கள் நிகழ்வில் பதவியேற்கவிருக்கின்றனர். (ஐ)

# வடக்கு மாகாண நிர்வாகத்தில் இரு செயலாளர்களுக்கு மாற்றம்





யாழ்ப்பாணம், ஜுலை 13

வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் மேலும் இரண்டு செயலாளர்களுக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாணபேரவைச்செயலகத்தின் செயலாளராக திருமதி ரூபினி வரதலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராக ஆர் .வரதீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டமையுடன் இந்த நியமனங்கள் எதிர் வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடை முறைக்கு வரும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் கடந்த ஜனவரியில் பதவி யேற்ற பின்னர், ஜுலை முதலாம் திகதி தொடக்கம் ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் மாற்றப்பட்டனர். இந்த நிலையில் மேலும் இரண்டு செயலாளர்களுக்கான மாற்றம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-07)

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388



# இந்தியா அணியின் தோல்வி; முன்னாள் வீரர்கள் அதிருப்தி

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டியில், இந்தியா அணி, நியூஸிலாந்து அணியிடம் தோல்வியடைந்தமை குறித்து அணியின் முன்னாள் வீரர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மென்செஸ்டர்– ஓல்ட் ட்ரப் போர்ட் மைதானத்தில் நடைபெற்ற பரபரப்பான இந்தப் போட்டியில், நியூஸிலாந்து அணி 18 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அணியின் முன்னாள் வீரர்களான சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஸ்மண், சவுரவ் கங்குலி ஆகியோர் இப்போட்டியின் தோல்விக் குறித்து தங்களது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் கூறிய கருத்துக்கள் இவை :–

240 எனும் இலக்கை சந்தேகம் இன்றி இந்தியா நிச்சயம் அடைந்திருக்க முடியும். இது பெரிய ஓட்ட இலக்கு அல்ல. போட்டியின் ஆரம்பத்திலேயே நியூஸிலாந்து அணி 3 விக்கெட்டுகளைவீழ்த்திஇந்தியஅணிக்கு நெருக்கடி கொடுத்துவிட்டது.

அணி எப்போதும் ரோஹித், விராட்கோஹ்லிஆகியோரையே நம்பிக்கொண்டிருக்க முடியாது. அவர்கள்தான் சிறப்பான ஆரம்பம் கொடுத்திருக்க வேண்டும் என்றும் சொல்லக் கூடாது. அணியில் அனைவருக்குமே பொறுப்பு உண்டு.

டோனியும், ஜடேஜாவும் சிறப்பாக விளையாடினார்கள். 7வது விக்கெட்டுக்கு 116 ஓட்டங்கள் என்பது சிறப்பான ஒன்றுதான். எப்போதுமே டோனி வந்து போட்டியின் இறுதியில் முடித்துக் கொடுப்பார் என நினைப்பது சரியானதே அல்ல.

நியூஸிலாந்து அணி மிகச் சிறப்பாக விளையாடியது. கேன் வில்லியம்சனின் தலைமை மிகச்சிறப்பாக இருந்ததை நான் உணர்ந்தேன்' – என கூறினார்.

அணியின் மற்றொரு முன்னாள் வீரரான வி.வி.எஸ். லக்ஸ்மன் கூறுகையில்,

டோனியை மிகவும் பின் வரிசையில் களம் இறக்கியமை மிகவும் தவறான முடிவு ஆகும். தினேஷ் கார்த்திக் ஆட்டமிழந்த பிறகு ஹார்திக் பாண்ட்யாவுக்கு முன்னதாக அவரைக் களம் இறக்கி இருக்க வேண்டும்.

டோனி,ரிஷப்பந்த்இணைந்து இருந்தால் போட்டியின் தன்மை மாறி இருக்கும். இளம் வீரரான ரிஷப்பந்த்துக்கு அவர் சரியான ஆலோசனை வழங்கி இருப்பார் என கூறினார்.

இதுதவிர அணியின் முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி இது குறித்து கூறுகையில் :–

ஓட்ட இலக்கை 'சேஸ்' செய்யும் கட்டத்தில் டோனியை 7ஆவது வீரராக அனுப்பிய முடிவு தவறானது. அவரை முன்னதாககளம்இறக்கிஇருக்க வேண்டும். அவர் முன்னதாக துடுப்பெடுத்தாடியிருந்தால் விக்கெட் சரிவை தடுத்து இருப்பார்.

ஹார்திக் பாண்ட்யா, தினேஷ் கார்த்திக் போன்றோருக்கு கடைசி கட்ட ஓவர்கள்தான் சரியாக இருந்து இருக்கும் – என கூறினார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் என எதிர்பார்க்கப்பட்ட இந்தியா அணி, இவ்வாறு அரையிறுதியோடு வெளியேறியிருப்பது பலரையும் வியப்பு கலந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## டோனியின் ரன் அவுட்டால் அதிர்ச்சியில் ரசிகர் மரணம்



கடந்த 11ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்து நாடு திரும்பும் நிலைக்கு வந்தபோதிலும் இந்த தோல்வியை இன்னும் சில ரசிகர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

டோனி எப்படியும் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்வார் என்றே கோடிக்கணக்கான ரசிகர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் அவருடைய ரன் அவுட் கிரிக்கெட் ரசிகர்களை மட்டுமின்றி அவருக்கு அவுட் கொடுத்த அம்பயரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்த நிலையில் இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான அரையிறுதி போட்டியை பார்த்த ரசிகர் ஒருவர் மாரடைப்பால் மரணம் அடைந்துள்ள அதிர்ச்சி செய்தி ஒன்று வெளி வந்துள்ளது. கொல்கத்தாவை சேர்ந்த சைக்கிள் கடை உரிமையாளர் ஸ்ரீகாந்த் மைதி என்பவர் டோனியின் தீவிர ரசிகர். டோனி விளையாடும் அனைத்துப் போட்டியையும் பார்த்து ரசிக்கும் வழக்கம் உடையவர்.

அதேபோல்அரையிறுதிப்போட்டியை தமது செல்போனில் ஸ்ரீகாந்த் பார்த்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது, டோனி ரன் அவுட் ஆனதும் அவர் தரையில் மயங்கி விழுந்துள்ளார் எனவும் தெரிகிறது. மயக்கம் அடைந்த ஸ்ரீகாந்தை அருகில் இருந்தவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்தனர் ஆனால், அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டடார் எனத் தெரிவித்தமையால் அந்தப் பகுதியே சோகத்தில் மூழ்கியது.

## ரணில் அரசுக்கு ஆதரவளிக்கும்.........

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் கடந்தும் ஏன் உயிர்பெறவில்லை. இந்த நிலையில் தமிழ் மக்கள் தாங்கள் தொடர்ந்து ஏமாற்றப்படுவதாக உணர்வதில் என்ன தவறு இருக்க முடியும்?

அதேவேளையில், காணாமல் போனோர் விவகாரம் தொடர்பாக ஒரு நகர்வு கூட முன்நோக்கி மேற்கொள்ளப்படவில்லை. அரசியல் கைதிகள் எத்தனையோ போராட்டங்கள் நடத்திய பின் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்களிக்கப்பட்டது. ஆனால் கண் துடைப்புக்காக ஓரிருவரைப் புனர்வாழ்வுக்கு அனுப்பிவிட்டு பலருக்கு ஆயுள் தண்டனை, நூறு வருடம், இரு நூறு வருடம் எனக் கொடிய தண்டனைகள் வழங்கப்பட்டன. ஒருபகுதி காணிகள் விடுவிக்கப் பட்டதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் பல முக்கிய இடங்களிலிருந்து படையினர் வெளியேற மறுக்கின்றனர். எமது மக்களோ நிவாரண முகாம்களில் அல்லற்படுகின்றனர்.

நாம் தொடர்ந்து அரசுக்கு எமது ஆதரவை உறுதியான முறையில் வழங்கி வந்தபோதிலும் நாம் தொடர்ந்து ஏமாற்றுப் பட்டே வந்துள்ளோம். தொடர்ந்தும் நாம் ஏமாற்றுப்படவேண்டுமா?

என் மதிப்புக்குரிய அரச தரப்பு உறுப்பினர்களே நாம் இப்போதும் உங்களுக்கு ஆதரவு தருவதன் மூலம் மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்படவேண்டுமா? உங்களில் சிலர் இது சிங்கள பௌத்த தேசம் என்பதை ஏற்றுக்கொண்டவர்கள். அப்படியானால் உங்களுக்கே உரிய தேசத்தின் ஆட்சியைக் காப்பாற்ற ஏன் எங்களின் உதவியைக் கோருகின்றீர்கள்?

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நீங்கள் முன்வைப்பதற்காகக் கூறும் காரணங்கள் நியாயமானவை என்பதை ஏற்றுக் கொள்கிறோம். வாழ்க்கைச் செலவு உயர்வினால் எமது மக்கள் மூச்சுத் திணறுவதை நாங்கள் உணர்கிறோம். அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் நாடு துண்டாடப்பட்டு விற்கப்படுவதை நாமும் ஏற்கிறோம். எதிர்காலத்தில் இலங்கை மேற்கு நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையேயான ஆயுத, பொருளாதாரப் போட்டியில் மையமாக மாறுவதை நாமும் விரும்பவில்லை.

இந்த நிலையில் உங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் இந்த அரசு வீழ்த்தப்பட்டால் உங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? உங்களால் ஆட்சி அமைக்க முடியுமா? நிச்சயமாக முடியாது. அடுத்த தரப்பு மஹிந்த தரப்பு? மீண்டும் நாம் ராஜபக்ஷ சகோதரர்களின் சர்வாதிகார ஆட்சிக்கு வழி திறந்து விட வேண்டுமா?

ஆளும் தரப்பிடமும் எதிர்த் தரப்பினரிடமும் நாம் கேட்பது ஒன்றைத்தான். எமது உரிமைப் பிரச்சினைகளை நேர்மையாக அணுகுங்கள். நேர்மையாகத் தீர்க்க முயற்சி செய்யுங்கள். அப்போது எங்கள் ஆதரவு உங்களுக்குக் கிடைக்கும் எனக் கூறி விடை பெறுகின்றேன் – என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



## சஹ்ரானுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞன் ஒருவர் மஹரகம பகுதியில்வைத்து நேற்றுக்காலை பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொகமெட்தாஜுதீன் அகமெட் (வயது–20) என்ற இளைஞனே இவ்வாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்று என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் மொகமட் சஹ்ரான் காசிமுடன் இணைந்து நுவரெலியா பயிற்சி முகாமில் ஆயுதப் பயிற்சி பெற்றவர் என்று தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மொகமட் சஹ்ரான் காசிமுடன் ஆயுதப் பயிற்சிகளில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தமது பொறுப்பில் எடுத்துள்ளனர்.

41 வயதான ராஜ் கோபால் முதியன்சலாகே இஸ்மயில் மொஹமட் நஷிர், 21 வயதான சாகுல் ஹமீது ஹிஸ்புல்லா மற்றும் 29 வயதான மொஹமட் முக்தார் ஆஷிப் ரசாக் ஆகியோரே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

ராஜ்கோபால் முதியன்சலாகே இஸ்மயில் மொஹமட் என்ற நபர் நிகவரெட்டிய பகுதியில் கடந்த மே மாதம் முதலாம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அத்துடன், அம்பாந்தோட்டைப் பகுதியில் சஹ்ரானுடன் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டார் என எழுந்த சந்தேகத்தின் பேரில் வெலிமடைப் பகுதியில் வைத்து சாகுல்ஹமீது ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்க ப்பட்டார்.

மேலும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு விசாரணைகளில் மூன்றாவது சந்தேகநபரான மொஹமட் முக்தார் ஆஷிப் ரசாக் குறித்து பல விடயங்கள் தெரியவந்துள்ளன.

இதன்படி, கண்டி – பேராதனை பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரிகளினால் மொஹமட் முக்தார் ஆஷிப் ரசாக் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் தற்போது பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர் கண்டி – அருப்பல பகுதியில் பயங்கரவாத பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனது அரசியல் வாழ்வுக்கு ஜனாதிபதி தரப்பு கடும் அழுத்தங்களை வழங்குகின்றது. பொலனறுவைப் பொலிஸார் தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றனர். நான் ஒரு பிஸ்டலைக் கூட வைத்துக் கொண்டவனல்லன். ஆனால்பொய்க்காரணங்களைக் காட்டி என் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. என்னைக் கொல்லப்போவதாக பல தடவை எனக்கு பலர் ஊடாகத் தகவல் கூறியுள்ளனர்.

சி.ஐ.டிக்குச்சென்று முறையிட்டால் அது தமக்குரிய பொறுப்பில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். ஒரு எம்.பிக்கே பாதுகாப்பு இல்லையென்றால் சாதாரண மக்களுக்கு எப்படிப் பாதுகாப்பைவழங்க முடியும்.? ஜனாதிபதி தனது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யாதிருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். எம்.பி. ஒருவர் கொல்லப்பட்ட பின்னர் நடவடிக்கை எடுப்பதில் பயனில்லை – என்றார். (ஐ)

## பனாமா சதுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவில் சதுப்பு நிலத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்எனக்கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த இளைஞர் கடந்த புதன்கிழமை சேற்றுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த பீ.சுதர்ஷன் (வயது–34) என்ற இந்த இளைஞன்கடந்தசிலநாட்களுக்கு முன்னர் அமெரிக்கா நோக்கிச் சென்றுள்ளார். பயண முகவர் ஊடாக அமெரிக்கா செல்லும் போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

பனாமா ஏரி வழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, சேற்றுக்குள் சிக்கி அவரால் வெளியே வர முடியாமல் போனதாக அவருடன் சென்ற ஏனைய இளைஞர்கள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த இளைஞனின் சடலம் பொலிஸாரினால் பனாமா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அவரது மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. உயிரிழந்த இளைஞனின் சடலத்தை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு தேவையான உதவிகளைச் செய்யுமாறு உறவினர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## ரிஷாத் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் பதவிகளை பொறுப்பேற்க எடுத்த தீர்மானம் குறித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ரிஷாத் பதியுதீனுக்கு மீண்டும் அமைச்சுப் பதவியை வழங்கினால் அரசு கடுமையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் அத்துரலிய ரத்ன தேரர் கூறியுள்ளார்.

இதேவேளை –

ரிஷாத் பதியுதீனுக்கு மீண்டும் அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இதனை மெய்ப்பிக்கின்ற வகையில் ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினரான ஹேஷான் விதானகே, ரிஷாத் பதியுதீனுக்கு மீண்டும் அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

இதேபோன்று மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன .(ஐ)

## விடுவிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கி உயிரிழந்துள்ளார்.

முகமாலை மடத்தடியைச் சேர்ந்த 71வயதுடைய முதியவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

2000 ஆம் ஆண்டு இடம் பெயர்வுக்குப் பின்னர் முகமாலையில் உள்ள அவரது காணி விடுவிக்கப்பட்டுள்ளது. அந்த காணிக்குச் சென்று விட்டு மீசாலை கிழக்கில் உள்ள வீட்டுக்குச் சைக்கிளில் திரும்பிய முதியவரை பட்டா ரக வாகனம் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தின் பணிப்பாளராகவும், கிளிநொச்சி உருத்திரபுரத்தில் உள்ள ஆரோக்கணம் இளையோர் விடுதி இல்லத்தின் இயக்குநராகவும், வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்வேறு பங்குகளில் அருட்தந்தையாகவும் இருந்து அருட்பணி புரிந்தவர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டபோது முல்லைத்தீவு பங்குத்தந்தையாக இருந்து மதங்களைக் கடந்து மனிதாபிமானப் பணியை அப்பகுதி மக்களுக்கு அறப்பணி புரிந்தவர். முல்லைத்தீவு நகரில் அமையப்பெற்ற ஆழிப்பேரலை நினைவாலயத்தை (பழைய இராயப்பர் தேவாலயத்தில்) நிறுவ முன்னின்று உதவியவர்.

இவர் அனைத்து மதத்தவர்களினாலும் மதிக்கப்பட்டவர். தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நேசித்ததுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையாலும் நேசிக்கப்பட்ட மனிதர்.

போர்க்காலத்தில் மக்களோடு மக்களாக இருந்து அருட்பணியுடன் அறப்பணியாற்றியவர்.

இவர் 2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போது வலைஞர்மடம் பகுதியில் கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது அரச படையினால் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் படுகாயமடைந்தார். இறுதிப் போரின் சாட்சிகளில் ஒருவராக விளங்கியவர்.

அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரின் இழப்பானது தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

## எல்லை தாண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர்.

62, 48,39,27,22 மற்றும் 12 வயதுடைய இந்திய மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலஞ்ச அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் சரியான முடிவை எடுத்திருந்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி பெற வைத்திருக்கலாம். ஆனால், இருவரும் தவறிழைத்துவிட்டனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் நேற்று முன் தினம் (11) பகல் 12. 10 முதல் 12.30 மணிவரையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இரண்டாம் மாடியில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் எவை? இரு தலைவர்களும் நாட்டுக்குத் தெளிவுப்படுத்தவேண்டும்.1949 இல் இருந்து இற்றைவரை அரசுகளுக்கு எதிராக 26 நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவற்றில் ஒரு பிரேரணை மட்டுமே வெற்றிபெற்றுள்ளது. அதுவும் கடந்த ஒக்டோபர் மாதம் ஆட்சி கவிழ்ப்பு சூழ்ச்சியின்போது மஹிந்த அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையாகும் – என்றார். (ஐ)

# மஹிந்தவின் 2 ஆவது புதல்வன் யோஷிதவுக்கு நிச்சயதார்த்தம்




முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராபக்ஷவுக்கு நிச்சயதார்த்தம் இடம்பெற்றுள்ளது.

நிதிஷா ஜயசேகர என்ற பெண்ணை யோஷித ராபக்ஷ, நேற்றுக் கரம் பற்றியுள்ளார்.

யோஷிதவின் மூத்த சகோதரனான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தனது முகப்புத்தகத்தில் பதிவொன்றை இட்டு சகோதரனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகனான ரோஹித ராஜபக்ஷ அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 27 ஏக்கர் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் காணிகளைப் பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று முற்பகல் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் –

போரின் போது இராணுவத்தினரால், படையினரால் கையகப்படுத்தப்பட்ட பொதுமக்களின் காணிகளை மீண்டும் அவர்களிடமே கையளிக்கவேண்டுமென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவுக்கமைய யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் ஒத்துழைப்போடு விடுவிக்கப்படும் இந்தக் காணிகள் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டன.

அந்தக் காணிகளை ஆளுநர் யாழ்.மாவட்ட மேலதிக அரசஅதிபர் முரளிதரனிடம் வழங்கினார்.

2015ஆம் ஆண்டு முதல் இன்றுவரை யாழ் மாவட்டத்தில் பாதுகாப்பு படைகளின் வசமிருந்த காணிகளில் 2 ஆயிரத்து 963 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பலகாணிகள் படிப்படியாக விடுவிக்கப்படவுள்ளமையைக் குறிப்பிட்ட ஆளுநர், அதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார் – என்றுள்ளது. (ஐ–07)

## வடக்கில் சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை நிதி அமைச்சுக்கும் நெதர்லாந்து இங்க் வங்கிக்கும் இடையே இது தொடர்பான கடன் உடன்படிக்கை கடந்த புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகளை வலுப்படுத்துதல் மற்றும் பருத்தித்துறை, மாங்குளம் ஆதார வைத்தியசாலைகள், கிளிநொச்சி, வவுனியா மாவட்ட வைத்தியசாலைகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

உடன்படிக்கையில் நிதி அமைச்சின் செயலாளர் ஆர்.எச். சமரதுங்க மற்றும் நெதர்லாந்து அதிகாரிகள் கைச்சாத்திட்டனர்.

நெதர்லாந்துக்கான இலங்கை தூதுவர் சுமித் நாகநந்த மற்றும் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் செல்வி ஜோயானி டூர்னிவாட் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வடக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அரசு இந் நிதியைக் கொண்டு வட மாகாணத்தில் சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது என்று நிதி அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ஐ)

## கோரம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகலில் போதியளவு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரசன்னம் (கோரம்) இன்மையால் சபை அலுவல்கள் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டன.

சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எம்.பியிடம் கோரம் இன்மை சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, அவர் கோரம் சேர அழைப்பு மணியை ஒலிக்கச் செய்தார். அப்போதும் 9 பேர் மட்டுமே சபையில் இருந்தனர். 20 பேர் குறைந்த பட்சம் இருந்தால் மாத்திரமே சபை அலுவல்களை முன்னெடுக்கலாமென்பதால் வேறு வழியின்றி சபையை ஒத்திவைத்தார் சபைக்கு தலைமை தாங்கிய முஜிபுர் ரஹ்மான் எம்.பி. (ஐ)

## சோபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுடனான சோபா உடன்படிக்கைக்கான எதிர்ப்புகள் அதிகரிப்பதைஇந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. இந்த உடன்படிக்கை காரணமாக இந்தியாவின் தென்பகுதியில் அமெரிக்க இராணுவத் தளமொன்று ஏற்படுத்தப்படலாம் என இந்தியாவின் எக்கனமிக்ஸ் ரைம்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் நெருங்கிய அயல்நாடு என்ற அடிப்படையில் இலங்கை எடுக்கும் முடிவை மதிக்கும் என இந்திய அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயத்தில் புதுடில்லி கொழும்பின் முடிவை மதிக்கும் எனத் தனது பெயர் வெளியிடப்படுவதை விரும்பாத இந்திய அரச வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார் எனக் குறிப்பிட்டுள்ள இணையத்தளம், சோபா விவகாரம் எங்கள் அயல் சம்பந்தப்பட்டதாலும் இந்தியாவுக்கு இதில் மூலோபாய நலன்கள் உள்ளதாலும் நாங்கள் இதனை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார் எனவும் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இறைமையை மீறும் விதத்தில் தனது நாடு எந்த உடன்படிக்கையிலும் கைச்சாத்திடாது என இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளமையை இந்தியாவின் எக்கன மிக்ஸ் ரைம்ஸ் இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைப் பிரதமருடன் அரசியல் மோதல்களில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இலங்கையின் நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்த உடன்படிக்கையிலும் கைச்சாத்திடுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறியமையையும் இந்தியாவின் எக்கனமிக்ஸ் ரைம்ஸ் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# தெரிவுக் குழு அமர்வு நேற்று நடக்கவில்லை

கொழும்பு, ஜூலை 13

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை ஆராயும்நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நேற்றைய அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

அரச புலனாய்வுத் துறை, குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸ் ஆகியவற்றின் உயரதிகாரிகள் நேற்றுச் சாட்சியமளிக்கவிருந்தனர். ஆனால் அவர்கள் வேறு சில அலுவல்களுக்குச் செல்லவேண்டி உள்ளனர் எனத் தெரிவுக் குழுவுக்கு அறிவித்திருப்பதால் நேற்றைய அமர்வு பிறிதோரு தினத்திற்கு வைக்கபட்டது.

இதற்கிடையில் தாம் நாடு திரும்பும் வரை அதிகாரிகள் தெரிவுக்குழுவுக்குச் செல்லக்கூடாதெனப் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி உத்தரவிட்ட காரணத்தினால்தான் இந்த அதிகாரிகள் நேற்று தெரிவுக்குழுவில் முன்னிலையாகவில்லை என மற்றுமொரு தகவல் தெரிவித்தது. (ஐ)

# ஹேமசிறி, பூஜிதவுக்கு எதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 13

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தடுக்க தவறினார்களெனக் கூறி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஏழு நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் முன் நேற்று இவை ஆராயப்பட்டபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஐ)

# ஞாயிறன்று யாழ். வருகிறார் ரணில்

## ஸ்கந்தவரோதயாவின் 125ஆவது ஆண்டு விழாவிலும் விருந்தினராகப் பங்கேற்கிறார்

**யாழ்ப்பாணம், ஜூலை 13 பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார். மறுநாள் திங்கட்கிழமை சுன்னாகம் - கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியின் பரிசளிப்பு 125ஆவது ஆண்டு விழாவில் அவர் பிரதம விருந்தினராகப் பங்கேற்கிறார். யாழ்ப்பாணத்துக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை வருகை தரும் பிரதமர், அன்றிரவு ஐக்கிய தேசியக் கட்சியினரை நட்சத்திர விடுதி ஒன்றில் சந்திக்கிறார்.**



அத்துடன் மறுநாள் திங்கட்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியின்125ஆவதுஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகப் பங்கேற்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் அழைப்பின் பெயரில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த நிகழ்வில் கலந்து கொள்வார்.

அத்துடன், ஐந்தரைக் கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் கலையரங்கத்துக்கான அடிக்கல்லையும் பிரதமர் நாட்டி வைப்பார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

அத்துடன், அன்றைய தினம் காரைநகருக்கும் பிரதமர் செல்கிறார். (ஐ)

# 6 மாதத்தில் முகப்புத்தக முறைப்பாடுகள் 748!

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் கடந்த 6 மாதங்களில் முகப்புத்தக சமூக வலைத்தளம் தொடர்பில் 748 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தொலைத்தொடர்புகள் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் கணனி அவசர தயார் நிலை குழு தெரிவித்துள்ளது.

முகப்புத்தக கணக்குகளை முடக்குதல்,தவறான முறையில் பயன்படுத்துதல் ஆகியவை தொடர்பில் 267 முறைப்பாடுகளும், போலியான கணக்கு கள் தொடர்பில் 481 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கணினி அவசர தயார் நிலைக் குழுவின் சிரேஷ்ட பொறியியலாளர் ரவிந்து மீகஹஸ்முல்ல நேற்றுத் தெரிவித்தார்.

தனிப்பட்ட நபர்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு பழிவாங்கும் நோக்கிலேயே அதிகமான குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றன என அவர் மேலும் கூறினார்.

சமூக வலைத்தளங்களில் ஒருவருடைய தனிப்பட்ட தகவல்களை திருடுவதன் மூலம் அவரைச் சமூகத்தில் மிக மோசமாகச் சித்திரிக்க முற்படுவது, இணையத்தளக் குற்றங்களில் முதன்மை வகிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, உலகில் மிக மோசமாக அதிகரித்து வரும் இணையத்தள குற்றங்களால் எதிர்கால இளைய சமுதாயத்தினரும் தொழில் முயற்சியாளர்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகுவர் எனச் சர்வதேச ஆய்வு நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இணையவழித் தாக்குதல்கள் காரணமாக 2019 ஆம் ஆண்டு முதல் 6 மாத காலப்பகுதியில் இரண்டு ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஜூனிபர் ரிஸர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று, 2021 ஆம் காலப்பகுதியில் ஆண்டுக்கு 6 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட கூடும் என சைபர் தாக்குதல்கள் தொடர்பான வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் போலியான கணக்குகள் ஆசிய நாடுகளிலேயே அதிகம் உருவாக்கப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 76 வீதமான இந்தியர்கள் சமூக வலைத்தளங்களில் போலியான தகவல்களையே பதிவிட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நேரடிச் சாட்சியம் ஒன்று மூச்சடங்கிப்போனது

## அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் மறைவுக்கு தமிழர் மரபுரிமைப் பேரவை இரங்கல்

முல்லைத்தீவு, ஜூலை 13

சிறந்த மனிதாபிமானப் பணியாளரும் யாழ். மறைமாவட்டக் குருவுமாகிய அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதனின் மறைவுக்கு தமிழர் மரபுரிமைப் பேரவை தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.

தமிழர் மரபுரிமைப்பேரவை இதுகுறித்து வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில்– இலங்கை அரசினால் திட்டமிடப்பட்டு




அரங்கேற்றப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் உச்சம் தொட்ட கொடூரங்களில் ஒன்றான வலைஞர் மடம் தேவாலயம் மீதான தாக்குதலில் காயமடைந்து அந்தத் தாக்குதலின் இரத்தச் சாட்சியமாக இறுதிவரை குரல் கொடுத்துக் கொண்டிருந்த அருட்தந்தை வண ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளார் 12.07.2019 அன்று இறைபதமடைந்தார் என்ற செய்தி தமிழ் இனத்தை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

1996 இல் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டு முல்லைத்தீவு நகரையும் சூழ இருந்த கிராமங்களையும் சேர்ந்த மக்கள் அரசின் உதவிகள் எதுவுமின்றி மீள்குடியமர்ந்து கொண்டிருந்த இடர் மிக்க நாள்களில் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் முல்லைத்தீவின் பங்குத்தந்தையாகப் பொறுப்பெடுத்தார் .

உட்கட்டுமானங்கள் சிதைக்கப்பட்ட நிலையில் சிங்கள ஏகாதிபத்தியத்தால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைக்கும் முகம் கொடுத்துக்கொண்டு மீள்குடியேறிய எம் மக்களுக்கு மதம் கடந்து பல்வேறு மனிதாபிமானப் பணிகளையும் உதவிகளையும் செய்து அந்த மக்களின் நேசிப்பைப் பெற்றார் .

2004 இல் முல்லைத்தீவை கொடூரமாகத் தாக்கிய சுனாமியின்போது தெய்வாதீனமாக உயிர்தப்பிய இவர் சுனாமியால் அனைத்தையும் இழந்துபோன அந்த மக்களுக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. மதம் கடந்த இவரின் அன்பு செலுத்தல் அனைத்தும் மக்களையும் இவர்பால் ஈர்த்தது.

2009 இல் முள்ளியவாய்க்காலில் தமிழர் இன அழிப்பு உச்சம் தொட்ட நாள்களில் சிங்கள இராணுவத்தால் அரங்கேற்றப்பட்ட வலைஞர் மடம் தேவாலயத்தின் மீதான திட்டமிட்ட தாக்குதலில் காயமடைந்து முள்ளிவாய்க்கால் தமிழர் இனப்படுகொலையின் இரத்தச் சாட்சியமாக இறுதி வரை பல்வேறு தளங்களிலும் தனது சாட்சியைத் துணிவுடன் பதிவு செய்தவர் .

தமிழ் மக்களின் விடுதலை போராட்ட வரலாற்றில் தலைமையாலும் தளபதிகளாலும் போராளிகளாலும் நேசிக்கப்பட்ட மகத்தானமனிதம்ஒன்றுஇன்றுஎம்மிடையே இல்லை. அருட்தந்தை வண ஜேம்ஸ் பத்திநாதனுக்கு எமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தி நிற்கின்றோம் – என்றுள்ளது. (ஐ)

# அளம்பில் வடக்கில் தீயில் எரிந்தது வாடி



முல்லைத்தீவு, ஜூலை 13

முல்லைத்தீவு – அளம்பில் வடக்கு, உப்புமாவெளிப் பகுயில், இனந்தெரியோதாரால் மீனவர் வாடி ஒன்று எரிக்கப்பட்டுள்ளது.

பிறிதொருவருடைய அனுமதிப் பத்திரத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுவந்த வெளிமாவட்ட மீனவர் ஒருவரின் சிறிய வாடி ஒன்றே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அந்த வாடிக்குரிய வெளிமாவட்ட மீனவர் அனுமதிப்பத்திரமில்லாது, வேறு ஒருவரின்அனுமதிப்பத்திரத்தில்தொழிலை மேற்கொண்டமையுடன், உப்புமா வெளி மீனவர் சங்கத்துடனும் கடந்த காலங்களில் முரண்பட்டார் எனவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம்காலை இடம்பெற்ற முரண்பாடுகளையடுத்து, அந்த வெளி மாவட்ட மீனவர் உப்புமாவெளிப் பகுதி மீனவர்களுக்கெதிராக பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். இந்தனை அடுத்து இரு மீனவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் இரவு அந்த வெளிமாவட்ட மீனவரது வாடி எரிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தை அறிந்து அந்த இடத்துக்கு வந்த வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட மீனவர்சமேளனங்களின்தலைவர் பேதுறுப்பிள்ளை பேரின்பநாதன் ஆகியோர் மீனவர்களிடம் பிரச்சினைளைக் கேட்டறிந்தனர். (ஐ)





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.07.2019 இல் வெளியிடப்பெற்றது.